MAKKAL PATHTHIRIKKAI 23,FEBRUARY,2019



அரசியல் என்பது புரட்சிகரமானதோ, அல்லது எதிர்ப் புரட்சிகரமானதோ, ஒரு சில தனிப்பட்டவர்களின் நடவடிக்கைகளோ அல்ல. மாறாக ஒரு வர்க்கம் இன்னுமொரு வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டமே ஆகும்!

– மாவோ சேதுங் –

திருவள்ளுவர் ஆண்டு 2050 (விளம்பி வருடம்) - மாசி மாதம், 11ம் நாள்
சனிக் கிழமை, 23 - பெப்ரவரி - 2019 விலை 20.00 ரூ.

இதழ் – 02
இருவார வெளியீடு




# மக்கள் பத்திரிக்கை

சிந்தனைக் கிளர்ச்சி செய்வோம் !


தினக்குரல், வீரகேசரி பத்திரிக்கைகளின் அதிகபடியான பங்குகள் அர்ஜீன் அலோசியஸ் குடும்பத்துக்கு சொந்தானதாகும். பக். 09

நீர் மேலாண்மை அடிப்படையில் குடிநீரும் விவசாயத்துக்கான பாசன நீரும் உரியமுறையில் பகிரப்பட வேண்டும். பக். 07

சிங்கபூர் வர்த்தக ஒப்பந்தத்தை பல தரப்பினர் எதிர்த்தாலும் ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்வதாக இல்லை. பக். 05

# இந்துமா கடலைச் சூழும் போர்மேகங்கள்

## ஈழவர் இடர்தீர விதி செய்யுமா!



“அம்பாந்தோட்டை துறைமுகம் அமெரிக்காவுக்கு எதிரான சீனாவின் யுத்தத்தின் போது , சீன கடற்படை மத்திய தளமாகப் பயன்படுத்தப்படும் அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளது”

**மைக் பென்ஸ்**
**துணை சனாதிபதி, ஐக்கிய அமெரிக்கா**



“திருகோணமலையில் ஈழவர்களின் ஆதிக்கம் எந்தளவில் தக்கவைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தளவில் ஈழவர்களின் இருப்பும், போராட்டமும் நிலைத்திருக்கும்”

**இரட்ணசபாபதி**
**தாபகர், ஈழப்புரட்சி அமைப்பாளர்கள்**

எட்டாம் பக்கம் பார்க்க



MONSANTO
BIOTECHNOLOGY
innovation - collaboration - speed

# ஆர்மிப் புழு | அமெரிக்கச் சதி

விவசாயத்திற்கும், உணவு உற்பத்திக்கும் பேராபத்தை ஏற்படுத்தியிருக்கும் 'ஆர்மிப் புழு' தாக்கத்தின் பின்னனியில் அமெரிக்க உயிரியல் தொழில்நுட்ப பன்னாட்டு கம்பனியான மொன்சன்டோ இருக்காலாம் என விவசாய விஞ்ஞானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். 'ஆர்மிப் புழு' என அறியப்படும் ஆக்கிரமிப்பு பூச்சியினத்தின் தாக்கம் காரணமாக சோளப்பயிர் செய்கை பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. சோளம் போன்றே ஏனைய பயிர்களுக்கும் இந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சோளப்பயிர் இனங்களில் மொன்சன்டோ நிறுவனத்தினால் மரபணு மாற்றம் செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்படும் *பி.டி கோர்ன்* எனும் இனம் மாத்திரமே ஆர்மிப் புழுவின் தாக்கத்திற்கு ஈடு கொடுக்கும் ஒரே ஒரு இனமாகும்.

உலகின் 90 சதவீதமான மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளின் உரிமத்தை வைத்துள்ள மொன்சன்டோ நிறுவனம், மரபு சார் விவசாயத்தை அழித்து தமது மரபணு மாற்றப்பட்ட விதைகளை விற்பனை செய்யத் தீவிரமாக முயல்கின்றது. *பி.டி கோர்ன்* சோள விதைகளை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பமும், உரிமமும் மொன்சன்டோ நிறுவனத்திடமே உள்ளது.


இரண்டாம் பக்கம் பார்க்க

# இந்த மண் எங்களின் சொந்த மண்

**700 நாட்களை கடந்து தொடரும் கேப்பாபுலவு மண்மீட்பு போராட்டம்**


நீர் வளம் உண்டு
நில வளம் உண்டு
நிம்மதி ஒன்றே இல்லை
இருந்த போதும்
இந்த மண்
எங்களின் சொந்த மண்

இரண்டாம் பக்கம் பார்க்க



கட்டுரைகள்







www.facebook.com/paththirikkai
www.paththirikkai.com
paththirikkai@gmail.com

**அடுத்த இதழ் வெளியீடு**
மார்ச் – 09 (மாசி மாதம் 25ம் நாள்)
மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் வெளிவரும்

நல்ல கருத்துக்களின் பிறப்பு ! [illegible] !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மண்

## எங்களின் சொந்த மண்

நீர் வளம் உண்டு
நில வளம் உண்டு
நிம்மதி ஒன்றே இல்லை
இருந்த போதும்
இந்த மண்
எங்களின் சொந்த மண்

இலங்கையின் கடற்கரை பகுதிகளில் அதிக கவனத்துக்குள்ளான கடல் பகுதிகளில் காலிமுகதிடலும் ஒன்றாகும். இந்த காலி முகத்திடல் பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிலங்கா அரசின் கடற்படை தலைமையகம் இருந்தது. 2012ம் ஆண்டு இந்த இந்த இடம் ஹொங்கொங்கை தலைமயகமாகக் கொண்டியங்கும் சங்கிரி-லா வணிக குழுமத்துக்கு ஐந்து நட்சத்திர உல்லாச விடுதியை நிர்மாணித்துக் கொள்வதற்காக வழங்கப்பட்டது. கடந்த 2017 ஆம் பிரமாண்டமான இந்த உல்லாச விடுதி கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அவ்விடத்திலிருந்த கடற்படை தலைமையகம், கொழும்பின் பத்தரமுல்லை எனும் இடத்திற்கு நகர்த்தப்பட முடிவு செய்யப்பட்டுக் காணி ஒதுக்கப்பட்டு கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. தற்சமயம் வரை அதன் நிர்மாணப்பணிகள் நடந்து வருகின்றன. கடற்படை தலைமையகம் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் கொழும்பின் 10 வெவ்வேறு இடங்களில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 5,50, 036 சதுர அடி இடங்களில் இயங்கி வருகின்றது. வருடந்தோறும் இதற்காக 1,293 மில்லியன் ரூபாய்கள் வாடகைப் பணமாக செலுத்தப்படுகின்றது.

காலிமுகத்திடலை போலவே அதிக கவனத்திற்குள்ளான பிரதேசம் நந்திக் கடல் பிரதேசமாகும். கடல் என அழைக்கப்பட்டாலும் இது ஒரு களப்பு பிரதேசமாகும். இந்த நந்திக்கடல் கரையிலிருக்கும் கிராமமே கேப்பாபுலவு கிராமம் ஆகும்.

கேப்பாபுலவு என்பது குரக்கன் (கேப்பை), (புலவு)பயிர்செய்யப்படுகின்ற இடம் என்ற அர்த்தத்தில் வழங்கப்படும் பெயராகும். பலநெடுங்காலமாக இந்த பகுதி மக்கள் விவசாயத்திலும், மீன்பிடியிலும் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார்கள். கேப்பாபுலவு மண்வளமும், நீர்வளமும் நிறைந்த பிரதேசமாகும். ஒரு சில அடி ஆழத்தில் கிணற்று நீரைப் பெறமுடியும். பேராறு உட்பட சில ஆறுகள் நந்திக்கடலில் சேருகின்றன.

ஆறுகள் கடலுடன் கலக்கும் தரைப்பகுதி எப்போதும் வளமான மண் வளத்தைக் கொண்டிருக்கும். அதேபோல் களப்பின் உவர் நீர் அதிக மீன்வளத்தைக் கொண்டிருக்கும். நந்திக்கடல் பகுதி இயற்கையாகவே அழகியல் வனப்பு நிறைந்த பகுதியாகும். வங்காள கடலிலிருந்து சற்று தொலைவிலிருக்கும் இப்பகுதி இந்துமாக் கடல் பகுதியில் போரியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியும் ஆகும். விடுதலைப்புலிகளுடனான யுத்தம் இந்த நந்திக்கடல் பகுதியிலேயே முடிவுக்கு வந்தது.

வன்னி யுத்தம் நடந்த காலத்தில் லட்சக்கணக்கான மக்களுடன் கேப்பாபுலவு மக்களும் இடம்பெயர்ந்திருந்தார்கள். இடம்பெயர்ந்த மக்களின் நிலத்தை ஆக்கிரமித்து இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. மக்களின் நிலங்கள் இராணுவத்தினரின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படப் படுகின்றது.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமர்த்தப்பட்ட போது கேப்பாபுலவு மக்கள் சொந்த கிராமங்களில் குடியமர்த்தப்படாமல், அயல் பகுதியில் கால் ஏக்கர் வீதம் காணி வழங்கி குடியமர்த்தப்பட்டார்கள். இந்தப் பகுதி இன்று கேப்பாபிலவு மாதிரிகுடியிருப்பு என அழைக்கப்படுகின்றது.

எனினும் கேப்பாபுலவு மக்கள் தமது வளமான சொந்த வாழ்விடங்களிலேயே குடியமர்த்தப் படவேண்டும் என கோரிக்கையை முன்வைத்து இராணுவ முகாமுக்கு முன்பாக கொட்டில் அமைத்துப் போராடி வருகின்றார்கள். இந்த போராட்டம் 720 நாட்களைக் கடந்து தளராது தொடர்கின்றது.

கேப்பாபுலவை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதின் நோக்கம் மிக வெளிப்படையானது. தமிழர் பகுதியில் வளமான பகுதிகளை இராணுவ தேவை என்றும், வரலாற்றுத் தொன்மைமிக்க பகுதிகளை புனிதநகர் என்றும் அபகரித்து வருகின்றார்கள். இது பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு நோக்கிலானதே ஆகும். கடற்படை தலைமையகமே 6 வருடங்களாக 10 வெவ்வேறு இடங்களில் இயங்கி வரும் நிலையில், மக்கள் காலம்காலமாக வாழ்ந்த இடங்களை அபகரித்து இராணுவ முகாம் அமைக்க வேண்டியளவுக்கு பாதுகாப்பு தேவை எதுவுமில்லை.

இந்த நிலை இலங்கை வாழ் சகல தமிழ் பேசும் மக்களுக்கும் பொதுவானதாகும். வடக்கு – கிழக்கு – மலையகம் என பேதமெதுவும் இல்லாது தமிழ் பேசும் மக்கள் இத்தகைய ஆக்கிரமிப்புக்களை எதிர் கொண்டிருக்கின்றார்கள். இனியும் எதிர் கொள்வார்கள்.

எனவே தான்720 நாட்களை கடந்து தளராத உறுதியுடனும்,சோராத உணர்வுடனும் தொடரும் இந்த போராட்டத்தைப் பரந்தளவில் மக்கள் மயபடுத்தி வெற்றி கொள்ள வேண்டும்.; கேப்பாபுலவில் அடையும் வெற்றியானது, இலங்கை தீவில் இனிவரும் காலங்களுக்கான தமிழ் பேசும் மக்களின் இருப்புக்கும், வளர்ச்சிக்குமான வெகுசன போராட்டங்களுக்கு முகவுரையாக அமையும்.

முன்பக்க தொடர்ச்சி...

# ஆர்மிப் புழு – அமெரிக்கச் சதி

பி.டி *கோர்ன்* சோள இனம், *பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ்* எனும் பக்ரீரியா வின் மரபணு செலுத்தப்பட்டு உருவாக்கப்பட்டதாகும். இந்த பக்ரீரியா உருவாக்கும் ஒரு வகை அகநச்சு ஆர்மிப்புழுக்கு நச்சானதாகும். இதன் காரணமாக இச்சோளங்களை உணவாக்கும் ஆர்மிப்புழுக்கள் பக்ரீரியா சுரக்கும் அகநச்சு காரணமாக இறந்து போகும்.

2016 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க கண்டத்தில் 30 நாடுகளில் சோளப்பயிர்களை ஆர்மிப்புழு தாக்கியதால் பெரும் இழப்பு ஏற்பட்டு பொருளாதாரமே சரிந்து வீழ்ந்தது. அந்நாடுகளுக்கு மொன்சென்டோ தமது மரபணு மாற்றப்பட்ட பி.டி கோர்ன் சோள விதைகளை விற்பனை செய்ய முயற்சித்தது.

எனினும், பல தரப்பின் எதிர்ப்பு காரணமாக எதிர்பார்த்ததை போல் மொன்ன்டோவால் தமது வியாபாரத்தை நடத்த இயலவில்லை. இந்நிறுவனம் ஒவ்வொரு நாட்டிலிலும் அரசியல்வாதிகளுக்கு பணம் கொடுத்து காரியம் சாதிக்க முயன்றதாக பரவலான குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

தற்சமயம் மொன்சென்டோ நிறுவனம், வட அமெரிக்க கண்டத்தில் 4 நாடுகளிலும், தென் அமெரிக்க கண்டத்தில் 6 நாடுகளிலும், 12 ஐரோப்பிய நாடுகளிலும், 4 ஆபிரிக்க நாடுகளிலும், இந்தியா உட்பட 8 ஆசிய நாடுகளிலும் இயங்குகின்றது.

எனினும், இந்நிறுவன்த்தினால் உற்பத்தி செய்யப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவர வகைகளினால் மண்ணின் வளம் கெடுவதாகவும், மனிதர்களுக்குப் புற்று நோய் உட்பட பல ஆபத்துக்கள் ஏற்படுவதாகவும் குற்றச்ட்டுக்கள் முன்வைக்கப்பட்டு எதிர்ப்புக்கள் வலுப்பெற்றுவருகின்றன.

இந்த நிலையிலேயே இங்கையிலும், தெற்காசியாவிலும் தமது மரபணு மாற்றப்பட்ட விதை விற்பனையை விஸ்தரிக்கும் சதியாக, ஆர்மிப்புழு தாக்கம் பர்ப்பப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஹரிஷ்ணவி

## படுகொலைக்கு நீதி கிடைக்குமா?



2016 ஆம் ஆண்டு வவுனியா உக்கிளாங்குளத்தில் 13 வயது மாணவி கங்காதரன் ஹரிஸ்னவி வீட்டில் தனிமையிலிருந்த சமயம் படுகொலைச் செய்யப்பட்டிருந்தார். மரண விசாரணைகளின் போது இப்பாதக செயலை சிறுமியின் வீட்டுக்கருகில் வசிக்கும் ஒருவனே செய்திருப்பதும், சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியிருப்பதும் தெரியவந்தது.

எனினும், தற்போது 3 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மேலும், வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் தமிழ் அரசியல்வாதி ஒருவரின் உறவினர் என்றும், இணைய ஊடக நிறுவனம் ஒன்றுடன் நெருக்கமான தொடர்புடையவர் எனவும் செய்திகள் வெளியாகி இருந்தன. உடனடி மரண விசாரணையின் போதும் இந்த செல்வாக்கை பயன்படுத்தி விசாரணை அறிக்கையில் மாற்றம் செய்யவும் அழுத்தம் பிரயேக்கிக்கப்பட்டிருந்து. எனவே, குற்றவாளிக்கிருக்கும் செல்வாக்கின் காரணமாகவே வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்படுகின்றதா என பலத்தரப்பாலும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சிறுமி வித்தியா படுகொலை விசாரணை வேகமான நாடாத்தப்பட்டமைக்கு சமூகத்தில் எழுந்த எதிர்ப்பும் அழுத்தமும், முக்கிய காரணமாக இருந்து. அது போன்ற மக்களின் அழுத்தம் மூலமே குற்றவாளிகள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தப்புவதை தடுத்து நீதியை நிலைநாட்ட செய்ய முடியும்.

மக்களுக்கான பத்திரிக்கை என்ற மக்கள் மத்தியில் இந்த விடயத்தை நீதி நிலைநாட்டப்படும் வகையில் கொண்டு செல்லப்படுவது எமக்கிருக்கும் பொறுப்பாகும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக அதிகமான உரையாடல்களை நடத்தி சமூக அழுத்தத்தை ஏற்படுத்த மக்கள் பத்திரிக்கையையும் ஒரு தளமாக பயன்படுத்துமாறு அழைக்கின்றோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் – 01 இருவார வெளியீடு

நமக்காக நாம்

# மக்கள் பத்திரிக்கை

சிந்தனைக் கிளர்ச்சி செய்வோம் !

மக்கள் பத்திரிக்கை, இல 09, திரேசா ஒழுங்கை, வேளாங்கன்னிவீதி, பாலையூற்று, திருகோணமலை
தொலைப்பேசி +94769098390
மின்னஞ்சல் - **paththirikkai@gmail.com**
இணையத்தளம் - **www.paththirikkai.com**
முகநூல் பக்கம் - **www.facebook.com/paththirikkai**
இதழ் - 02 | பக்கங்கள் -12 | மாசி மாதம், 11ம் நாள்

## புதிய தளத்தில் சிந்தனை

## வேண்டும் !

“மக்கள் பத்திரிக்கை” இரண்டாவது இதழ் சிந்தனை துடிப்பை எழுப்பிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், எமது பத்திரிக்கையின் அரசியல் சார்புத் தன்மை தொடர்பாக எழுந்துள்ள ஐயப்பாடுகளை தெளிவுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மக்கள் பத்திரிக்கை, மக்களுக்காக மக்களினாலேயே நடாத்தப்படும் பத்திரிக்கையாகும். எனவே, சகல முனைகளிலும் பொது மக்களின் மேம்பட்ட வாழ்வியல் நிலைமைகளே மக்கள் பத்திரிக்கையினதும் அபிலாசையாகும்.

இங்கே மக்கள் எனும் போது இலங்கை தீவில் வாழும் தமிழை தம் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் சமூகத்தையே குறித்து நிற்கின்றோம். தமிழ் பேசும் மக்களை மக்கள் - மொழி - தேசம் அடிப்டையில் நாம் ஈழவர் என பகர்கின்றோம்.

சமுதாயத்தின் மேம்பாடு என்பது முரண்பாடுகளிலிருந்து பிறக்கின்றது. எமது ஈழச்சமூகம் இரண்டு வகையான முரண்பாடுகளை எதிர்நோக்கி உள்ளது. ஒன்று எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண். பாடு மற்றது எம் மக்கள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகள். இவை முற்று முழுதாக இயல்பில் வேறுபட்ட இருவகையான முரண்பாடுகளாகும்.

இந்த இரண்டு வகையான முரண்பாடுகளையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் முதலில் எதிரி யார்? மக்கள் யார்? என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஈழச்சமூகத்தின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஆதரித்து அதில் பங்கேற்கும் அனைவரும் மக்கள். சமூகத்தின் வளர்ச்சியை எதிர்க்கின்ற, தமது வளர்ச்சியில் மாத்திரம் கரிசனை படுகின்ற, பகைமை பாராட்டுகின்ற , அதற்குச் சார்பான பக்கம் நிற்கின்ற சமூக சக்திகள், சமூக குழுக்கள் எல்லாம் மக்களின் எதிரிகள்.

பேரினவாதமும், ஏகாதிபத்தியம், அவர்களுக்குச் சார்பானவர்களும் மக்களின் எதிரிகள் ஆவார்கள்.

எமது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கும் சாதி,மத, பிரதேச, பாலின, இன்னும் பிற முரண்பாடுகள் எம்மத்தியில் காணப்படும் முரண்பாடுகளாகும்.

நமக்கும் எதிரிக்கும் உள்ள முரண்பாடுகள் பகை முரண்பாடுகள் ஆகும். நம் மத்தியில், உழைக்கும் மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் பகையற்ற முரண்பாடுகள் ஆகும்.

தன்மையில் வேறுபட்ட முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்ட வகையில் தான் தீர்க்க முடியும். எமக்கும் பேரினவாத - ஏகாதிபத்திய கூட்டுக்கும் இடையிலான முரண்பாடு தேசிய புரட்சி மூலமே தீர்க்கப்பட முடியும். அதுபோலவே எம்மத்தியில் உள்ள முரண்பாட்டை சமூக புரட்சியின் மூலமே தீர்க்க முடியும்.

புரட்சிகர தத்துவத்தை தழுவிக் கொள்ளாமல் எந்த புரட்சிகர மாற்றத்தையும் சாதிக்க முடியாது. புதிய சிந்தனைத் தளங்களில் எம் தேடல்களை தொடங்காமல் புரட்சிகர தத்துவ பாதை செய்யவும் முடியாது. எனவே தான் மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றுக்குமான முன்னேறிய தத்துவத்தை மக்கள் பத்திரிக்கை தன் அரசியல் பார்வையாகக் கொண்டிருக்கிறது.

**2019** வருடம் அரசாங்கம் வரவு - செலவுகளை எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பதை பாராளுமன்றத்தில் சட்டமூலமாக முன்வைத்துள்ளது. இச்சட்ட மூலம் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் போதே அரசாங்க நிதி அமைச்சர் அரசாங்க முன்மொழிவுகளை முழுமையாக முன்வைப்பார். மக்கள் பிரதிநிதிகள் வரவு – செலவு திட்ட பிரரேனைத் தொடர்பாக விவாதத்தில் ஈடுபட்டு மக்கள் சார்பான மாற்றங்களைச் செய்விக்க முடியும்.

தற்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் நேரடி ஆதரவிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைமுக ஆதரவிலுமே ஆட்சியை நடத்தி வருகின்றது. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இக்கட்சிகளைச் சேர்ந்த 41 உறுப்பினர்களும் முழுமையான ஆதரவைக் கொடுத்தால் மாத்திரமே வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட முடியும். வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டால் ஆட்சி கவிழும் நிலை ஏற்படும். இதுபோன்றதொரு பேரம் சந்தர்ப்பத்தைத் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பெற்றிருப்பது அரிதான சந்தர்ப்பமாகும். எனினும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்ட சட்டமூலமானது மக்கள் மீது அதிக சுமைகளைச் சுமத்தும், நலன்புரிசேவைகளை புறக்கணிக்கும் வகையிலிருந்தும், அது குறித்து இக்கட்சிகள் எந்த கருத்துகளையும் வெளிப்படுத்தவில்லை.



# இராணுவ ஆட்சியை எதிர்வுக் கூறியிருக்கும் வரவு–செலவு திட்டம்

✍ பழ றிச்சர்ட்
pazlarichard@gmail.com

சட்டமூலம் முழுமையானது இல்லையெனினும், அரசாங்கம் முன்வைக்கப் போகும் திட்டம் எவ்வகையிலிருக்கும் என்பதன் சுருக்க வடிவமாகும். இதன் படி அரசாங்கத்தின் இந்த வருடத்தின் மொத்த செலவீனம் 4550 பில்லியன் ரூபாய்களாகும். கடந்த வருடம் 3982 பில்லியன் ரூபாய் அரசாங்கத்தின் செலவீனமாக இருந்தது. இவ்வருடம் அரசாங்க செலவீனம் 568 பில்லியனால் அதாவது 14.26 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அரசாங்கத்தின் செலவுகளுக்கும் வருமானத்துக்கும் இடையிலான வித்தியாசம் 1803 பில்லியன் ரூபாயாக இருந்தது. அதாவது அரசாங்கம் 2018 ஆம் ஆண்டில் தமது செலவுகளுக்காக 2175 ரூபாயை மாத்திரமே வருமானமாக ஈட்டிக் கொள்ளக் முடியுமாக இருந்தது. எனவே 1803 பில்லியன் ரூபாய் பற்றாக் குறைவாக இருந்தது.

இவ்வருட வரவு செலவு திட்டக் குறையானது, கடந்த வருடத்தின் அளவிலேயே இருக்கும் என கருதினோம் என்றாலும், அரசாங்க செலவுகளை ஈடுசெய்ய இவ்வருட வருமானம் 26 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் கடந்த வருடத்தில் புதிதாக வருமானம் ஈட்டும் வழிகள் எதனையும் உருவாக்கி இருக்கவில்லை. தொழில்துறைகளை உருவாக்கியும் இருக்கவில்லை. மாறாக வருமானம் ஈட்டித்தந்த அரச சொத்துக்களை விற்பனை செய்திருந்தார்கள்.

எனவே அரச வருமானம் இழக்கப்பட்டிருக்கின்றதே ஒழிய அதிகரிக்கப்படவில்லை. எனில், அதிகரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க செலவீனங்களுக்கான நிதியைக் கடன்கள் வாங்குவது மூலமாகவோ, அரச சொத்துக்களை விற்பனைச் செய்வதின் மூலமாகவோ, மக்களின் மீது மறைமுகமான வரிகளை அதிகரிப்பதின் மூலமாகவோ திரட்டிக் கொள்வதை தவிர வேறுமார்க்கங்கள் இல்லை.

எனவே, வரவு செலவு திட்டத்தின் பின் மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கப்படும் என்பது வெளிப்படை. இவ்வரியானது நாம் அன்றாடம் நுகரும் பொருட்கள், சேவைகள் மீது விதிக்கப்படுவதன் மூலம் மறைமுகமாகச் சேகரிக்கப்படும். இதன் காரணமாக வாழ்க்கை செலவீனம் உயர்வடையும்.

இவ்வாறு மக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியும், உழைக்கும் வர்க்கம் ஈட்டித்தரும் அந்நிய செலவானியுமே அரசாங்கத்துக்குக் கிடைக்கும் நிதியாகும். இந்த வருடத்தற்கான மொத்த செலவீனமான 4550 பில்லியன் ரூபாய்களில் 2232 பில்லியன் ரூபாய் இது வரை வாங்கிய கடன்களுக்கான தவணைக் கட்டணங்களுக்காகவும், வட்டிகளுக்காகவும் செலவாகிவிடும். எனில், 2318 பில்லியன் ரூபாய் நிதியே எஞ்சிய செலவீனங்களுக்கானதாகும். இதில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம், அரச நிறுவனங்களின் நடத்துகை செலவு, அரச விழாக்களுக்கான செலவுகள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற நலன்புரி சேவைகளுக்கான செலவீனங்கள், அபிவிருத்தி திட்டங்கள், மானியங்களுக்கான செலவீனங்கள் என அனைத்தும் அடங்கும்.

இம்முறை முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் படி 392.9 பில்லியன் ரூபாய்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் பொலிஸ்,சிவில் பாதுகாப்பு பிரிவு, இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய பிரிவுகள் அடங்குகின்றன. இத்துறைகளுக்கு மொத்தமாக 362.3 பில்லியன்களும், இதற்கு மேலதிகமாக பாதுகாப்பு அமைச்சின்கீழ் உள்வாங்கப்பட்டுள்ள அச்சுதினைக்களம் போன்ற துறைகளுக்கு 30.6 பில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் பாதுகாப்பு அமைச்சுக்கு 290.7 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. புலிகளுடனான யுத்தம் நிறைவுக்கு வந்த 2009 ஆம் ஆண்டில் கூட பாதுகாப்பு அமைச்சுக்கு 280 பில்லியன் ரூபாய்களே ஒதுக்கப்பட்டது.

யுத்தம் இல்லாத நிலையில் பெரும் தொகையை பாதுகாப்பு பிரிவுக்கு ஒதுக்கி இருக்கின்றமையானது எதிர்வரும் காலங்களில் இராணுவ கட்டமைப்பை பலப்படுத்தி, இராணுவ ஒடுக்கமுறையை ஏவ போகின்றமையையே கட்டியம் கூறுகின்றது. இது நிச்சியமாக பொருளாதார நெருக்கடியால் போராட விழையும் உழைக்கும் வர்க்கத்தின் மீதான அடக்குமுறையாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை

5 மில்லியன் மாணவர்களுக்குக் கல்வியை வழங்க 105 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் கல்விக்காக 102.8 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இது 1.14 சதவீத அதிகரிப்பாகும். ஆனால், கடந்த வருடம் சனவரி மாதமளவில் இலங்கை ரூபாயின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு சார்பாக 150.23 ரூபாய்களாகும். இம்மாதம் இது 179.47 ரூபாய்களாகியுள்ளது. அதன் பிரகாரம் ரூபாயின் பெறுமதி 18.79 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது கடந்த வருடம் ஒரு கொப்பியை 100 ரூபாய்க்கு வாங்கியிருந்தால், இன்று அதே கொப்பியை 118.79 ரூபாய் கொடுத்தே வாங்க வேண்டும். அப்படியாயின் உண்மையில் அரசாங்கம் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை (18.79 -1.14) 17 சதவீதத்தால் குறைத்துள்ளது.

கல்விக்கான ஒதுக்கீடு குறைக்கப்படும் போது அதை பெற்றோர்களே ஈடு செய்ய நேரிடும். இந்த வருட ஆரம்பத்திலேயே பாடசாலைகளை நடத்துவதற்கு அபிவிருத்தி சங்கங்கள் மூலம் பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடும் முஸ்தீபுகள் ஏலவே ஆரம்பமாகிவிட்டன. இது போன்ற நிலைமைகளே சுகாதார, போக்குவரத்துத் துறைகளுக்கும் ஏற்படும். இச் சுமைகளை மக்களே சுமக்க நேரிடும்.

இவ்வாறு உத்தேச வரவு செலவு திட்டமானது மக்களின் வாழ்க்கை சுமையை மேலும் அதிகப்படுத்தும் ஒன்றாகவும், நெருக்கடிகளை அதிகப்படுத்தும் ஒன்றாகவும், பொதுமக்கள் மீதான இராணுவ அடக்குமுறையை அதிகரிக்கும் ஒன்றாகவுமே வரவிருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுபிப்னர்களிடம் அரசாங்கத்தின் கடிவாளம் இருக்கும் நிலையில் இந்த நிலையை ஓரளவுக்கேனும் சரி செய்யக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.வழமைபோல் கைதூக்கும் பொம்மைகளாக இராது, மக்கள் நலன்களைப் பிரதிபலிக்க முயற்சி செய்தால் சில நன்மைகள் மக்களுக்குக் கைகூடச் செய்யலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியை ஆக்கிரமிக்கும் சிங்கள குடியேற்றங்கள்




கனீசியஸ்
kanisiyas27@gmail

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளின் பூர்வீக குடிகள் தமிழர்கள் தான் என்பதற்கு ஆழத்தோண்டிய ஆய்வுகள் சான்று பகர்கின்றன. கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடக்கை ஆட்சி செய்த மன்னர்களின் கலை, பண்பாடு கலாச்சாரம் சமய வழிபாட்டு முறைகள் மற்றும் ஆட்சிமுறைகள் என்பலவற்றின் வரலாறுகள் தமிழர்களின் பாரம்பரியத்துக்குச் சான்று பகரும்.

தமிழர்கள் வரலாறு ரீதியாகவும் இன விகிதாசார ரீதியாகவும் பௌதிக பொருளாதாரம், கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் பல முனைகளில் திரிபுபடுத்தபடுவதும், நசுக்கப்படுவதும் இன்று நேற்று அல்ல. மகாவம்சத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சிமுறை மறைக்கப்பட்டு சுருக்கப்படுவது தொடக்கம் இன்று வரை பல ஆதாரங்கள் மூலம் அதை எடுத்தியம்பலாம்.

தமிழர் தாயகமான வடகிழக்கில் இன விகிதாசாரத்தை தளம்பலடைய செய்யும் நிகழ்ச்சி நிரல் அபிவிருத்தி என்பதூடாகவும் குடியேற்றத் திட்டம் ஊடாகவும் மிகச் சாமர்த்தியமாக நகர்த்தப்பட்டு வருகிறது. இவ்வாறான செயற்பாடுகள் வடகிழக்கு தமிழர்களின் தாய பூமி என்ற சித்தாந்தத்தை நசுக்கி வாக்கு பலத்தை இழக்கச் செய்யும் ஓர் நடவடிக்கையே.

இலங்கையில் 1941 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தி திட்டம் முதலாவது சிங்களக் குடியேற்றமாகப் பதிவுகளில் சான்றாகின்றது. கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையை மையப்படுத்தி அதிகளவாக குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1949இல் அல்லைத்திட்டம் 1950 இல் கந்தளாய் திட்டம் 1954 இல் பதவியாத் திட்டம் (முதலிக்குளம் என்ற தமிழ்ப் பிரதேசத்தில்) 1954 இல் மொறவேவாத் திட்டம் (பெரியவிளாங்குளம் என்ற தமிழ் இடத்தில்) 1979 இல் மகாதிவூல் வெவ திட்டம் போன்ற சிங்கள குடியேற்றங்கள் தமிழர்களின் நிலத்தொடர்பையும் இனப்பரம்பலையும் சீர்குலைக்க வல்லனவாக அமைந்தன

வடக்கில் சிங்கள குடியேற்றங்கள் நடைபெறுகின்ற முக்கிய மாவட்டங்களாக முல்லைத்தீவு மற்றும் வவுனியாவை குறிப்பிடலாம். எல்லைப்புறம் மற்றும் பௌதீகவளம்,குடியேற்ற திட்டங்களின் தொடர்ச்சி என்பன இதற்கு சாதகமாக அமைகிறது.

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுவருவதால் அங்கு இன விகிதாசாரம் மாற்றமடைந்து செல்கிறது. இந்த நடவடிக்கை தொடருமானால் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களின் நிலைதான் வவுனியாவிற்கும் ஏற்படும்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகாவலி எல் வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கடந்த ஆட்சியில் நன்கு திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் நடந்தேறியுள்ளன.

### சிங்கள குடியேற்றத்தில் வவுனியா வடக்கு பிரதேசம்

வவுனியா வடக்கு பிரதேசம் (நெடுங்கேணி) ஒரு பிரதேச செயலகமாகவும் பிரதேச சபையாகவும் இயங்கி வருகின்றது 769.6 சதுர கி.மீ நிலப்பரப்பினை கொண்ட பிரதேச செயலக பிரிவில் 20 கிராம அலுவலர் பிரிவுகளில், 78 கிராமங்களில் மக்கள் வசிக்கின்றனர். மீள் குடியமர்த்தப்பட்டதன் பின்னர் 2011ம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி 100 வீதம் (11710) தமிழர்கள். 2018ம் ஆண்டின் நடு பகுதியின் புள்ளி விபரத்தின் படி தற்போது கம்பிலிவெவ, வெரகத்தென்ன, போகஸ்வெவ 1, போகஸ்வெவ 2 ஆகிய நான்கு கிராமங்கள் இணைக்கப்பட்டு 396 குடும்பங்களைச் சேர்ந்த 1277 பேர் அதாவது அதாவது மொத்த சனத்தொகையில் 9.83 வீதம் சிங்களவராவர்.

இந்த பிரதேச செயலக பிரிவுடன், முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக அலகிற்குட்பட்ட வெலிஓயா பிரதேசத்தின் 14 சிங்கள கிராமங்களை உள்ளடக்கியதாக இவ் பிரதேசசபை விளங்குகிறது. 2011ம் ஆண்டு இவ்பிரதேச சபையின் 8106 வாக்காளர்களில் 2515 பேர் சிங்கள வாக்காளர்கள் ஆவர் (கஜபாபுர 218, மொனராவெள 73, அத்தாவட்ணுவெள 703 ,நிக்கவெவெ இடதுகரை 681, நிக்கவெவெ வலதுகரை 546, கல்யாணபுர படிவம் 1 - 240, கல்யாணபுர படிவம் 2 - 54). இக்கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக அலகிற்குட்பட்ட கிராமங்களாகும் 2011ம் ஆண்டின் மொத்த வாக்காளரில் 31 வீதம் சிங்கள கிராம வாக்காளர்கள் 2017ம் ஆண்டின் மொத்த வாக்காளர் 12166 இதில் சிங்கள கிராம வாக்காளர்கள் 4084 அதாவது 34 வீதம் சிங்கள கிராம வாக்காளர்கள் மகாவலி எல் வலய குடியேற்ற திட்டம் நிறைவுறும் சமயம் நெடுங்கேணி பிரதேசம் சிங்கள பெரும்பான்மையுடையதாக மாறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

> “வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ‘கொக்கச்சான்குளம்‘ என்ற தமிழ்க் கிராமம் ‘கலாபோகஸ் வெவ’ என்ற சிங்களக் குடியேற்றக் கிராமமாக மாற்றப் பட்டிருக்கின்றது.”

### மகாவலி அபிவிருத்தியும் குடியேற்றமும்

மகாவலி அதிகாரசபை தற்போது 5 அபிவிருத்தி திட்டங்களை நடைமுறை படுத்தி வருகின்றது அதில் இரண்டு திட்டங்கள் வவுனியா முல்லைத்தீவு அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமைகிறது

வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவித்தித்திட்டம் மற்றும் கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது.

வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவித்தித்திட்டத்தின் மூலம் மகாவலி எல் வலயம்தில் நீர்ப்பாசன நிலங்களை வழங்குவதன் மூலம் 11 கிராமங்களைச் சேர்ந்த 6788 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், இதற்காக அவர்களுக்கு 2.5 ஏக்கர் வீதம் (வதிவிடத்திற்கு 0.5 ஏக்கரும், நீர்பாசனம் செய்யக்கூடியதாக ஒரு ஏக்கரும், மேட்டுக்காணி ஒரு ஏக்கரும்) காணிகள் வழங்கப்படுதல் 11 கிராமங்களுக்குச் சந்தை வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 150 கிலோமீற்றர் பாதை மற்றும் 132 கிலோ மீற்றர் குக்கிராமசாலை அமைத்து குடியிருப்பாளர்களின் நிலப்பரப்பு மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான உட்கட்டுமான வசதிகள். வழங்கபடுதல் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்திற்காக 'கொக்கச்சான்குளம்' என்ற தமிழ்க் கிராமம் 'கலாபோகஸ் வெவ' என்ற சிங்களக் குடியேற்ற கிராமமாக மாறியிருக்கின்றது.

கொக்கச்சான்குளம், தமிழ் மக்கள் அதிகப்படியாக விவசாயம் செய்து தமது வாழ்தாரத்தைக் அமைத்துக் கொண்டிருந்த பெரியகுளத்துடன் வயல் நிலங்களைக் கொண்டமைந்த கிராமமாகும். இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் யுத்தம் காரணமாக வெளியேறி வவுனியாவில் பல்வேறான இடங்களில் வசிக்கத் தொடங்கி இருந்தனர்.

இதனால் காடுகளாக மாறிய இக்கிராமத்தில் கடந்த ஆட்சிக்காலத்தில் காடுகள் அழிக்கப்பட்டு குளம் புனரமைக்கப்பட்டு ஹம்பாந்தோட்டை மற்றும் பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சுமார் 3000 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இக்கிராமத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கத்தோடு கிராமத்தின் இரு பகுதியிலும் இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டு வேறு பிரதேசத்தவர்கள் உட்செல்ல முடியாத வகையில் பாதுகாக்கப்பட்டிருந்தது இத்திட்டத்தை நடைமுறை படுத்த வெடிவைத்தகல்லுக்கும், கொக்கச்சான் குளத்திற்கும் இடைப்பட்ட பாரிய நிலப்பரப்பு குடியேற்றம் செய்யத் தயார் நிலையில் உள்ளது.

இரண்டாவது திட்டமான கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டமாகும். இது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியேற்றப்பட்ட சம்பத்நுவர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, மயா ஓயாவின் பிரதான கிளை ஆறான கிவுல் ஓயா ஆற்று நீரைப் பயன்படுத்தும் நோக்கில் ஆனதாகும்.

கிவுல் ஓயா ஆற்றுக்குக் குறுக்காக, 64.33 கன அடி அளவு நீரைத் தேக்கும் அணையும், மா ஓயாவின் இடது கரை மற்றும் சூரியான் ஆற்றின் வலது கரையின் 1700 ஹெக்டயர் புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் 12.9 கிலோமீற்றர் நீளமான கால்வாயையும் இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப் படவுள்ளது.

திட்டத்தை முன்னெடுக்க பாரியளவில் காடுகளை அழிக்கும் வேலைகள் நடைபெறுவதால் திட்டத்தின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் இவ்வாறான திட்டங்களின் போது நாற்பது ஐம்பது வருடங்களுக்கு மேல் தமிழ் மக்கள் வசிக்காத தமிழர்களின் பூர்வீக நிலங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது அல்லது இவ்வாறான பூர்வீக நிலங்களில் குடியேற்றம் செய்ய படும்போது குறித்த பிரதேசத்தில் இன விகிதாசாரத்தில் தளம்பல் ஏற்படாதவாறு குறித்த பிரதேசத்தில் வசிக்கின்ற காணிகளற்ற மக்களை உள்ளீர்க்க வேண்டும். குடியேற்றத்திற்கு குடும்பங்கள் போதாவிடத்து குறித்த மாவட்டத்தில் உள்ள மக்களை குடியமர்த்த வேண்டும். திட்டதிற்கு மேலும் குடும்பங்கள் தேவைபடுமிடத்து மாகாண ரீதியில் தெரிவு செய்யபடல் வேண்டும்.

வன்னி பெருநிலப்பரப்பில் நீர் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களும் குடியேற்ற திட்டங்களும் வருவதற்கு வன்னி மக்கள் எதிர்ப்பில்லை. ஆனால் அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில், இவ்வாறு தனிச் சிங்கள மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டு, தமிழர் பிரதேசத்தின் இன விகிதாசாரத்தை மாற்ற எடுக்கும் முயற்சிகள், வன்னியில் பெருநிலப்பரப்பில் தமிழர்களின் எதிர்கால இருப்பையே கேள்வி குறியாக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்தியத்துக்கு கம்பளம் விரித்திருக்கும் சிங்கப்பூர்–இலங்கை ஒப்பந்தம்

இலியட் எனும் கிரேக்க நாட்டு இதிகாசத்தில் கிரேக்கர்களுக்கும், ட்ரோய் எனும் நாட்டுக்கும் இடையில் நடந்த ட்ரோய் போர் பிரபலமானதாகும். மிகச்சிறிய ட்ரோய் நாட்டின் மீது பலம் பொருந்திய கிரேக்கர்கள் போர் தொடுத்தார்கள். கிரேக்கர்களின் முற்றுகையை ட்ரோய் வீரர்கள் எதிர்த்துப் போராடினார்கள். எவ்வளவு முயன்றும் ட்ரோய் கோட்டையினுள் நுழைய முடியாத கிரேக்கர்கள் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள்.

ட்ரோய் கோட்டைகளை விட உயரமான ஒரு மரக்குதிரையைச் செய்து வைத்து விட்டு கிரேக்கப் படைகள் தமது கப்பல்களில் ஏறி கடலுக்கு சென்று மறைந்து கொண்டார்கள். கிரேக்கப் படையை காணாததால், போரில் பின்வாங்கிவிட்டார்கள் என நினைத்த ட்ரோய் வீரர்கள், கிரேக்கர்கள் விட்டுச் சென்ற மரக்குதிரையை கோட்டை வாயிலை இடித்து கோட்டைக்குள் கொண்டு வந்தார்கள்.

பெரிய மரக்குதிரையில் கிரேக்க நாட்டின் சிறந்த வீரர்கள் ஒழிந்திருந்தார்கள். முற்றுகையை வெற்றி கொண்டதாக நினைத்து ட்ரோய் வீரர்கள் கேளிக்கை கொண்டாட்டங்களில் ஈடுபட்டார்கள். ட்ரோய் வீரர்கள் அயர்ந்திருந்த இரவு வேளையில், மரக்குதிரையிலிருந்து வெளியே வந்த கிரேக்க வீரர்கள் அவர்களை கொன்றொழித்து, கடலில் மறைந்திருந்த படைகளுக்கும் சமிக்ஞை அனுப்பினார்கள். இவ்வாறு நீண்ட காலம் வெற்றி கொள்ள முடியாதிருந்த ட்ரோய் நாடு தந்திரமாக வீழ்த்தப்பட்டது.


இலங்கையும் சிங்கப்பூரும் கடந்த வருடம் கைச்சாத்திட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும், ட்ரோய் நாட்டில் நுழைந்த குதிரை போல் பல ஆபத்துக்களை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது. ட்ரோய் நாட்டுக் கோட்டைக்குள் மரக்குதிரை கொண்டு வரப்பட்ட போது, பூசாரிகள் ஆபத்து மறைந்திருக்கின்றது என எச்சரித்தார்கள். எனினும் படைத்தரப்பு அதைக் கவனத்தில் எடுக்க வில்லை. அது போலவே சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம் குறித்துப் பல தரப்பினரும் எச்சரித்து வந்தாலும் ஆட்சியாளர்கள் எதனையும் கருத்தில் கொள்வதாக இல்லை.

இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் இலங்கையின் பொருளாதாரத்தை சர்வதேச நாடுகளுக்கு திறந்து தாராளமயமாக்குவதாகும். 1977ம் ஆண்டு முதல் இலங்கை திறந்த பொருளாதார கொள்கையை கடைப்பிடித்தாலும், அது கட்டுபாடுகளுடன் தேசிய பொருளாதாரத்தை பல வழிகளில் பாதுகாப்பதாகவே அமைந்திருந்தது.

இலங்கை தீவின் அமைவிடம் கேந்திர முக்கியத்துவம் காரணமாகப் பொருளாதார - அரசியல் - இராணுவ ரீதியாக ஆதிக்கம் செலுத்த ஏகாதிபத்திய நாடுகள் பல வழிகளில் கடந்த காலங்களில் முயன்றிருந்தார்கள். மகிந்த இராசபக்சவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடன் சீபா, எக்டா போன்ற ஒப்பந்தங்கள் மூலம் இது முயற்சிக்கப்பட்டிருந்தாலும், பல தரப்பினரின் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது.

எனினும், சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம் மூலம் தோல்வியடைந்த அனைத்து முயற்சிகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் கைகூடியுள்ளது. அதற்குக் காரணம், இந்த ஒப்பந்தமானது சர்வதேச வர்த்தக ஸ்தாபன உறுப்பு நாடுகள் கைச்சாத்திட்டுள்ள வரி மற்றும் வணிகம் தொடர்பான பொது இணக்கப்பாட்டு ஒப்பந்தம், வர்த்தகம் மற்றும் சேவைகள் தொடர்பான பொது இணக்கப்பாட்டு ஒப்பந்தம் என்பவற்றின் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்டுள்ளமையாகும்

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நிலையான அரசுகளையும், எல்லைகளையும் கொண்ட நாடுகள் உருவாகி தமக்குள் கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொண்டன. இதன் காரணமாக முன்னர் போல் நினைத்த மாத்திரத்தில் ஏனைய நாடுகளின்மீது ஆக்கிரமித்துக் கொள்ள முடியாத நிலை உருவானது. எனவே,




> “ இந்த ஒப்பந்தம் நரியும் கொக்கும் ஒரே தட்டில் பழரசம் அருந்த ஒப்பந்தம் செய்தது போன்று இலங்கையை பொருளாதார ரீதியாக அடிமைபடுத்தும் வஞ்சகமான உள்நோக்கத்தை கொண்டிருக்கிறது ”

ஏகாதிபத்திய நாடுகள் தமது ஏனைய நாடுகளின் வளங்களைச் சுரண்டவும், தமது உற்பத்திகளை விற்பனை செய்யவும் புதிய உபாயங்களை உருவாக்கி கொண்டன. கடன் கொடுத்தலும், வர்த்தக, பாதுகாப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதும் ஏகாதிபத்திய நாடுகள் ஏனைய நாடுகளை அடிமைபடுத்த கைக்கொள்ளும் தந்திரங்களாகும்.

இதைச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளே சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச வர்த்தக ஸ்தாபனம் போன்ற அமைப்புகளாகும். இந்த அமைப்புக்கள் முழுமையாக ஏகாதிபத்திய நாடுகளின் தேவைகளின் பொருட்டு செயற்படுபவையாகும்.

சர்வதேச வர்த்தக ஸ்தாபனம், சர்வதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளை தாராளமய படுத்தி, தடைகளை அகற்றி ஒழுங்குப்படுத்துவதற்கான அமைப்பாகும். சிங்கப்பூர் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது சர்வதேச வர்த்தக ஸ்தாபனத்தின் விதிகளின் பிரகாரம் இலங்கை சட்டங்களில் திருத்தங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கமையவே 2018ம் ஆண்டு மார்ச் மாதம் மிகைபொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டு தீர்வைகள் சட்டமும், முற்பாதுகாப்பு சட்டமும் உருவாக்கப்பட்டது.

சிங்கப்பூரானது எந்த வகையிலும் விவசாயம் அல்லது கைத்தொழில் நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தை உருவாக்கி கொண்ட நாடு அல்ல. முழுமையாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதாரத்தை உருவாக்கியிருக்கும் நாடாகும். சிங்கப்பூரில் எந்தவொரு நாடும் இலகுவாக வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து, சிங்கபூர் ஊடாக ஏனைய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட முடியும்.

எனவே, இந்த ஒப்பந்தமானது சிங்கப்பூர் உடன் செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டாலும், சிங்கப்பூரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடக் கூடிய எந்த ஒரு நாடும், சிங்கப்பூரில் ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்வதின் மூலம் இலங்கையில் சுதந்திரமான வர்த்தக நடவடிக்கையில் ஈடு படலாம். இது மிகச் சரியாக ட்ரோய் நாட்டுக்குள் கிரேக்க வீரர்கள், மரக்குதிரையில் ஒழிந்து நுழைந்தது போன்றதாகும்.

உதாரணமாகச் சிங்கப்பூரில் துண்டு நிலத்திலும் விவசாயம் செய்யப்படவில்லை. எனினும் ,சிங்கப்பூரில் ஒரு கம்பனியைப் பதிவு செய்து, ஏனைய நாடுகளிலிருந்து நெல்லை வாங்கி இலங்கைக்கு விற்க முடியும். இதற்கு வரிச்சலுகை விதிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் வெளிநாடுகளிலிருந்து நெல் இறக்குமதி செய்யும் போது ஒரு கிலோவுக்கு 50 ரூபாய் வரி விதிக்கப்படுகின்றது. வரிச்சலுகை விதிக்கப்பட்டால் பாரிய அளவு விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் கம்பனிகள் உள்ளூர் உற்பத்தியை விட குறைந்த விலையில் நெல்லை விற்க முடியும். இவ்வாறு நடந்தால், உள்ளூர் விவசாயிகள் தமது உற்பத்தியை விற்க முடியாது,விவசாயம் செய்வதைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும். காலப்போக்கில் பெற்றோல், டீசலை போல் எமது உணவு தேவைக்காக பன்னாட்டு கம்பனிகளை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படும். இது போல் ஏனைய துறைகளும் வீழ்ச்சி காணும் போது நாடு, பன்னாட்டு நிறுவனங்களூடாக ஏகாதிபத்தியங்களின் அடிமையாக்கும்.

எனினும் தெளிவான கொள்கைகளை வகுத்து சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களூடாக நன்மை பெறும் நாடுகளும் உண்டு. உதாரணமாக ஜப்பான் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அதன் விலையை விட ஐந்து மடங்கு வரி விதிக்கப்படும். எனினும் ஜப்பான், அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா ஜப்பானிற்கு வரியில்லாமல் அரிசி ஏற்றுமதி செய்கிறது. அதற்குப் பதிலாக ஜப்பானிய கார்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எனினும், இலங்கை சிங்கப்பூர் உடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் அவ்வாறான ஒன்றாக அல்லாது, நரியும் கொக்கும் தட்டையான தட்டில் பழரசம் அருந்த ஒப்பந்தம் செய்துக் கொண்டது போன்று இலங்கையைப் பொருளாதார ரீதியாக அடிமைப்படுத்தும் வஞ்சகமான உள்நோக்கம் கொண்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் சதாகாலத்துக்கும் நடைமுறையிலிருக்கும் வகையிலேயே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்திலிருந்து ஒரு தரப்பு வெளியேறுவதை, சர்வதேச வர்த்தக ஸ்தாபனத்தின் பொது இணக்கப்பாட்டு ஒப்பந்தங்களே கட்டுப்படுத்துகின்றன. இவ் இணக்கப்பாட்டின் பிரகாரம் ஒரு தரப்பு ஒப்பந்தத்திலிருந்து விலக வேண்டும் ஆயின், மறுதரப்புக்கு ஏற்படும் முழு இழப்பையும் நட்டயீடாக செலுத்த நேரிடும். எனில் கடன் தவணையைக் செலுத்தக்கூட கடன் வாங்கிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகும் வாய்ப்புக்களே இல்லை.

எனவே தான் சிங்கப்பூர் ஒப்பந்தமானது எதிர்காலத்தில் இலங்கையை பன்னாட்டு கம்பனிகளூடாக ஏகாதிபத்திய நாடுகளின் காலடியில் அடகு வைக்கும் ஒப்பந்தமாகவும், பொருளாதார அடிமையாக்கும் ஒப்பந்தமாகவும் அபாயகரமானதாக இருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்திய சார்பு வலதுசாரி கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும், தீவிர ஏகாதிபத்திய விசுவாசியான ரணில் விக்ரமசிங்கவும் எந்தவித கவலையுமின்றியே இலங்கையை பெரும் ஆபத்தில் தள்ளிவிட்டிருக்கின்றார்கள்.

இவர்களது ஏகாதிபத்திய விசுவாசம் காரணமாகவே, இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படாது அமைச்சரவை பத்திரம் மூலமாக அவசர அவசரமாக தீர்மானம் நிறைவேற்றினார்கள். 1600 பக்கங்களில் ஆங்கில மொழியில் மாத்திரம் இருக்கும் இந்த ஒப்பந்தம், 2017ம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

இரண்டு வாரங்களின் பின் 2018 சனவரி 2ம் திகதி ஒப்பந்தம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு, சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. சட்டமா அதிபர் ஒரு வாரத்தின் பின் சனவரி 09ம் திகதி இலங்கையில் வழக்கில் இல்லாத சட்டங்களை நடைமுறை படுத்தும் அனுமதியிருந்தால் ஒப்பந்தத்தை கைச்சாத்திடலாம் என அறிவித்தார். இதன் பிரகாரம் சனவரி 16ம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சரவையில் ஆங்கிலம் வாசிக்க தெரியாத, ஆங்கிலத்தில் புலமையில்லாத பல அமைச்சர்கள் இருக்கும் நிலையில் 1600 பக்கங்களை ஒரே வாரத்தில் வாசித்து முடித்திருப்பார்கள் என நம்புவதற்கு இடமில்லை. எனில் இங்கு அமைச்சரவை கலந்துரையாடல்கள் என்பது வெறும் ஏமாற்று சம்பிரதாய நடவடிக்கைகள் மாத்திரமே என்பது தெளிவான விடயமாகும்.

எனினும் இவ் ஒப்பந்தமானது, சர்வதேச வர்த்தக ஸ்தாபனத்தின் உதவியுடன் இலங்கை போராசியர்கள் சிலருக்கு சிங் கப்பூர் நாட்டில் வழங்கப்பட்ட பயிற்சியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதாகும். எனவே இந்த ஒப்பந்தமானது ஏகாதிபத்திய நாடுகளின் தேவை நிமித்தம், அவர்களின் வழிகாட்டலின் பேரில், ஏகாதிபத்திய விசுவாசிகளால், மக்களுக்கு எதிராக, மக்கள் விரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டதாகும். இவ்வாறான அநீதிகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் எழுவதைத் தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம், பயங்கரவாத தடுப்பு சட்டம் போன்ற புதிய ஒடுக்கு முறை சட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கின்றது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றையாட்சி – ஒருமித்த நாடு

# சமவுரிமை – சமஷ்டி – சுயநிர்ணயம்

## இன்னும் பிறவும்

# ஈழவரின் உடைமைப்பாடும்




“பேரினவாதத்தின் இரட்டை சமூக பரிமாணத்தை விளங்கிக் கொண்டால் மாத்திரமே தீர்வுகள் தொடர்பாக சரியான திசையில் சிந்திக்க முடியும்”

பகுதி 02

## பேரினவாதத்தின் சமூக பரிமாணம்

ஈழவர்கள் கூட்டு வாழ்வாலும், உழைப்பாலும் கட்டியெழுப்பி உடைமையாக்கியிருக்கும் தமது பண்பாட்டு சமூக வாழ்வை அனுபவிப்பதற்கு, சிங்கள மொழி பேசும் சமூகத்தின் சூத்திரதாரிகளினால் ஏற்படுத்தப்பட்டு வரும் தடையே தேசிய இனமுரண்பாடாக நீண்டிருப்பதைக் கடந்த இதழில் கண்டோம்.

தமிழ் மொழியை தமது தொடர்பாடல் மொழியாகக் காலம் காலமாகப் பயன்படுத்தி வரும் ஈழவர்கள் தமக்கே உரித்தான வகையில் கட்டியெழுப்பியிருக்கும் பண்பாட்டுச் சமூக வாழ்வை அனுபவிக்கவோ, முன்னேற செய்யவோ தடுக்கப்படுவதற்கான காரணம், முழு தீவையும் சிங்கள மொழி பேசும் சமூகத்தின் தனி உடைமையாக வசப்படுத்திக் கொள்ளும் ஆக்கிரமிப்பு நோக்கிலாகும் என்பதில் எவரொருவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

வரலாற்று நோக்கில் இந்த ஆக்கிரமிப்பு எண்ணம், தனிமனிதர்களின் குறுகிய இச்சைகளிலிருந்தும், அதிகார ஆசைகளிலிருந்துமே ஊற்றெடுத்திருக்க வேண்டும். குறுகிய எண்ணம் கொண்டவர்கள் அதிகாரத்திற்கு வந்ததின் மூலமாகவோ, அதிகாரத்தில் இருந்தவர்களில் குறுகிய எண்ணம் துளிர்விட்டதாலோ இது நடந்திருக்கலாம். எப்படியிருப்பினும் சிங்கள சமூகத்தில் துளிர்விட்டு, வளர்ந்து விருட்சமாகி இருக்கும் இந்த ஆக்கிரமிப்பு எண்ணம், பேரினவாதமாக, ஈழவர் மீது கொடூர அடக்குமுறையை ஏவி, மனிதக்குல வரலாற்றின் இழிவான பக்கங்களில் பதிவாகிக் கொண்டிருக்கிறது.

இலங்கை தீவில் சிங்களவர்களின் வரலாற்றைப் புனைந்து வைத்திருக்கும் மகாவம்சம் கூறும் பல கதைகளில் துட்டகெமுனு மன்னன் தொடர்பான பிரபலமான கதையொன்றுள்ளது. தீவின் வடபகுதியை தமிழ் மன்னன் எல்லாளன் ஆட்சி செய்துக் கொண்டிருந்த வேளையில், தென் பகுதியில் ருகுனு இராச்சியத்தை கவண் திஸ்ஸ என்பவன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவனது மகனான துட்டகெமுனு எப்போதும் கால்களை மடக்கி, சுருண்டப்படியே நித்திரை கொள்வானாம். காரணம் கேட்பவர்களிடம், “வடக்கே தமிழர்களும், தெற்கே கடலும் நெருக்கி கொண்டிருக்கும் போது எப்படி கால்களை நீட்டி நிம்மதியாக உறங்க முடியும்” என கேட்பானாம். துட்டகெமுனு, எல்லாளன் மீது போர்தொடுக்குமாறு தனது தந்தையை பல முறையை வற்புறுத்தினானாம். எனினும், எல்லாளனின் செங்கோலாட்சியைக் காரணம் காட்டி அவனது தந்தை அதை மறுத்து வந்தானாம். இதனால் ஆத்திரமடைந்த துட்டகெமுனு, அவனது தந்தைக்குப் பெண்கள் அணியும் ஆடைகளையும், உபகரணங்களையும் பரிசாக அனுப்பி வைத்தானாம்.

இந்த கதையின் உண்மைத்தன்மை எதுவாக இருந்தாலும், சிங்கள மரபு கதையாகவும், செவி வழியாகவும், பாடசாலை - பிரிவெனா கல்வி நிலையங்கள் ஊடாகவும், 37000 சிங்கள கிராமங்களில் விகாரைகள் ஊடாகவும் நீண்ட காலமாகப் பரப்பப்பட்டு வருகின்றது. இது தன்னியல்பாகவே சிங்கள சமூகத்தில் தமிழர்கள் தன்னாதிக்கத்துடன் இருப்பது தொடர்பான அச்சவுணர்வையும், எதிர்புணர்வையும், குரோத மனப்பான்மையையும் வளர்த்து விடுகின்றது. இது வெறும் ஒரே ஒரு எடுத்துக் காட்டு தான்.

சமூக அதிகார நிறுவனங்கள் (அரச நிர்வாகதுறை, கல்விக் கூடங்கள், பௌத்த மத நிறுவனங்கள்....), ஊடகங்கள்(அச்சு- இலத்திரனியல் ஊடகங்கள்,கலை-இலக்கியங்கள், மக்கள்) ஊடாக சிங்கள சமூகத்தில் வேர்விட்டிருக்கும் ஏனைய இனங்கள் தொடர்பான அச்சவுணர்வு, எதிர்புணர்வு, குரோத மனப்பான்மை என அனைத்தும் சேர்ந்து பேரினவாத சிந்தனையாக உருவெடுத்து, ஈழவர் உடைமைப்பாடு மீதான ஆக்கிரமிப்பாகவும், அழித்தொழிப்பு நடவடிக்கைகளாகவும் அராஜகமாகியிருக்கின்றது.

இதன் பிறப்பிடம் மேலே கூறியது போல் துட்டகெமுனு போன்ற அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த பலரின் குறுகிய அதிகார இச்சைகளும், சிந்தனைகளுமே ஆகும். இன்று சிங்கள சமூகத்தில் வியாபித்திருக்கும் பேரினவாத சிந்தனைப் போக்கையே அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கையகப்படுத்திக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இதற்காக அவர்கள் தம்மை ஈழவர்களின் தன்னாதிக்கத்துக்கு எதிரானவர்களாகவும், தீவிர சிங்கள பேரினவாதியாகவும் பிரச்சாரப் படுத்திக் கொள்கின்றார்கள்.

உண்மையில் இங்கு அரசியல்வாதிகளைவிட சமூகமே பேரினவாத சிந்தனையைக் கொண்டதாகும். சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் தமது சிந்தனையை சமூக பொது மட்டத்திலிருந்து மேம்படுத்திக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இதனால் தான் அரசியல் செயல்பாடுகளில் தீவிரமான இனவாதத்தை கக்கும் பலரும் நடைமுறையில் சக இனத்தவர்களை ஆதரித்து செல்பவர்களாகவும் இருக்கின்றார்கள். இன்று இனவாதத்தை எதிர்ப்பதாகச் சொல்லும் சிங்கள, தமிழ் இடதுசாரிகள் உட்பட பலரும், “அரசியல்வாதிகளே அவர்களின் சுயநலத்திற்காக இனவாதத்தை விதைத்து வளர்க்கிறார்கள், எனவே இவர்களைத் தோற்கடிக்க வேண்டும்” என்றே சொல்லி வருகின்றார்கள். மேலோட்டமாக அவதானிக்கும் போது இது உண்மையாக தெரியும். ஆனால் இது ஒரு மாய தோற்றப்பாடே ஒழிய உண்மை இல்லை.

சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரை அவர்களில் வேரோடிப் போயிருக்கும் பேரினவாத ஆக்கிரமிப்பு சிந்னைக்கு தலைமைத்துவமும், செயல்வடிவமும் கொடுக்கக் கூடியவர்களை அல்லது அதற்கு எதிரான பக்கத்தில் நிற்காதவர்களையே தேர்தல்கள் ஊடாக தெரிவு செய்வார்கள். எனவே, அரசியல்வாதிகளும் பேரினவாத சிந்தனையைப் பிரதிநிதித்துவ படுத்தினால் மட்டுமே சிங்கள சமூகத்தின் வாக்குகளை பெற முடியும்.

எனினும், இதற்காகச் சிங்கள மக்கள் தம்மீது சுமைகளை ஏற்றிவைத்துக் கொள்வதும் இல்லை. எனவே தான் தேர்தல்களில் இடதுசாரி சிந்தனை கொண்டவர்களையோ, தீவிர பௌத்த அடிப்படைவாத சிந்தனை கொண்டவர்களையோ தெரிவு செய்வதில்லை. தீவில் சிங்களவர்களின் தனியுடைமைப்பாட்டை நிலை நாட்டும் வலதுசாரிகளையே தெரிவு செய்கின்றார்கள்.

அதாவது, சிங்கள சமூகத்தின் சிந்தனை போக்கில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தாது, அரசியல்வாதிகளில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. அரசியல்வாதிகள் இந்த சமூகத்திலிருந்து உருவாகி வளர்பவர்கள் தான். இவர்கள் சமூகத்தின் சிந்தனையை தாங்கியே வளர்வார்கள். இவர்களை மாற்றி விடுவதின் மூலம் சமூகத்தை மாற்றிவிட முடியாது. சிங்கள சமூகத்தின் சிந்தனை போக்கை மாற்றுவதின் மூலம் மாத்திரமே அரசியல்வாதிகளை மாற்றிட முடியும்.

ஆனால், இங்கு சமூகம் என்பதையும், மக்கள் என்பதையும் நாம் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். சிங்கள சமூகம் பேரினவாத ஈடுபடுத்தவும், பௌத்த மதமும், பௌத்த மத நிறுவனமும் பயன்படுத்தப்படுவது உண்மையே. எனினும் பௌத்த மதத்தின் உண்மையான சிந்தனைகள் சிங்கள மக்கள் மத்தியில் தாராளமய பண்பாட்டையும் சிந்தனையையும் வளர்த்திருக்கின்றது. எனவே தான், சிங்களம் பேசுபவர்கள் சமூகமாக அல்லாது தனித்தனி மக்களாக சக இனத்தவருடன் அந்நியோன்யமாக சகவாசம் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இலங்கை தீவில் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்களம் பேசும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இல்லை. இங்கு நாம் இருதரப்பிலும் இருக்கும் மிகச் சொற்ப அளவிலான இனவெறியர்களை புறக்கணித்து விடுவோம். இருதரப்பு மக்களும் மொழியால் வேறுபட்டாலும் கலாச்சார ரீதியாக நெருக்கமான தன்மைகளை கொண்டிருக்கின்றார்கள்.

தனித்தனி தமிழ், சிங்கள மனிதர்களிடையேயும், குடும்பங்களிடையேயும் பிரச்சினைகளற்ற உறவுகளும் தொடர்புகளும் இருக்கின்றன. இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் ஒருபோதும் பிரச்சினைகளே இல்லை. அநேகமான பௌத்த விகாரைகளில் இந்து தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. இந்துக்களும் பௌத்த மதத்துக்கு எதிரானவர்களே கிடையாது. தமிழ் பேசுபவர்களும், சிங்களம் பேசுபவர்களும் தொழிற்சாலைகளிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும் முரண்பாடுகள் இன்றி பணியாற்றுகின்றார்கள்.

எனினும், சிங்களம் பேசுபவர்கள் ஒரு சமூகமாகச் செயல்படும் போது அவர்கள் தமிழ் பேசும் சமூகங்களுக்கு எதிரானவர்களாகவும், பேரினவாத சமூகமாகவும் வடிவம் கொள்கின்றார்கள்.

இலங்கையில் பேரினவாதத்தின் இந்த இரட்டை சமூக பரிமாணத்தை விளங்கிக் கொள்ளும் போது மாத்திரமே நாம் தீர்வுகள் தொடர்பாகச் சரியான திசையில் சிந்திக்க முடியும்.

பேரினவாத வன்செயல்களின் போது சிலருக்கு இந்த இரட்டை பரிமாணத்துக்கு முகம் கொடுத்த அனுபவம் இருக்கின்றது. வன்செயல்களிலிருந்து சக தமிழ் நண்பர்களைக் காப்பாற்றிய சிங்களவர்கள் பலர் தமக்கு தெரியாதத்தமிழர்கள்மீதும்தமிழ்கிராமங்கள்மீது வன்செயல்களை ஏவி இருந்தார்கள். குறிப்பாக சிங்கள கிராமங்களுக்கு அருகில் வசித்தவர்களுக்கும், சிங்கள மக்களுடன் நெருக்கமாக வசித்தவர்களுக்கும் இந்த அனுபவம் கிடைத்திருக்கும்.

எனவே இனத்துவ முரண்பாடானது, அடிப்படை காரணமான பேரினவாத சிந்தனையை தோற்கடிப்பதின், மாற்றுவதின் மூலம் தான் தீர்க்கப்படமுடியும். இதற்கான நடவடிக்கைகளைச் செயல்பாட்டு தளங்களில் ஆரம்பிக்கும் போது தான் உண்மையான நல்லிணக்க செயல்பாடுகளும் ஆரம்பிக்கும்.

ஆனால், அரச தரப்போ சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முனையாது, சமூக மட்டத்தில் பிரச்சினைகளை உரையாடித் தீர்க்க முனையாது, சிங்கள , தமிழ் மொழி பேசும் மக்களிடையே இருக்கக் கூடிய அந்நியோன்னியத்தையும், தொடர்புகளையும் வலுப்படுத்தி பிரச்சார படுத்துவதின் மூலம் மழுங்கடிக்க முயல்கிறது. நல்லிணக்க செயல்பாடுகள் இந்த போக்கில் தான் அமைகின்றது. எனவே தான், சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் திருமணம் செய்து வைப்பதையும், இருமொழி கற்பதை ஊக்குவிப்பதையும், இராணுவத்தை கொண்டு வீடு கட்டிக் கொடுப்பதையும் நல்லிணக்க முயற்சிகளாக பிரச்சாரபடுத்தி வருகின்றார்கள்.

சிங்கள சமூகத்தின் பேரினவாத சிந்தனையில் உடைப்பு எதனையும் நிகழ்த்தாத நல்லிணக்க முயற்சிகள் தமிழ் பேசுபவர்கள் சமூகமாக தமது உரிமைகளை குறித்து கேள்வி எழுப்பாது, தனிதனி மனிதர்களாக அடிப்படை உரிமைகளுடன் வாழ்ந்து விட்டு போவதை ஊக்குவிக்கும் நோக்கிலானதாகும். இது உண்மையான நோக்கில், அந்தரங்க ஆக்கிரமிப்பு திட்டமே ஆகும். எளிமையான முறையில் விளங்கப்படுத்துவதானால் ஈழவர் தம் உடைமைப்பாட்டு உரிமைகளை எல்லாம் துறந்து விட்டு, லக்ஸ்மன் கதிர்காமர், கருணா அம்மான் போன்று சிங்கள பேரினவாதத்துடன் இணக்கமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இதன் காரணமாகத் தான் அரச தரப்பினர் இராணுவத்தைக் கொண்டு வீடுகட்டிக் கொடுத்தல் போன்ற போலி நல்லிணக்கச் செயல்பாடுகளை செய்து கொண்டு மறுபக்கத்தில் நில அபகரிப்பு போன்ற ஆக்கிரமிப்பு வேலைகளையும் செய்து வருகின்றார்கள்.

எனவே, இனத்துவ முரண்பாடுகளுக்குத் தீர்வை காணும் முயற்சிகள் முரண்பாட்டின் அடிப்படை காரணமான சிங்கள சமூகத்தில் வியாபித்திருக்கும் பேரினவாத சிந்தனையைக் களைவதிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். அதன் போது பேரினவாதத்தின் சமூக பரிமாணத்தை சரியாக விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். அது போலவே பேரினவாதத்தின் சமூகபரிமாணத்தின் தத்துவார்த்த, ஸ்தாபன அடித்தளங்களையும் தெளிவாக இனம் கண்டு கொள்ள வேண்டும். (தேடல் தொடரும்) ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு நீர் அரசியல்



✍ கலாநிதி சுப்ரமணியம் சிவகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொறியியல் பீடம் / யாழ் பல்கலைக்கழகம்
sssiva100@gmail.com

**கலாநிதி சு.சிவகுமார் அவர்களின் ஆய்வுக்கட்டுரைகளை www.researchgate.net/profile/Saravanamuttu_Sivakumar எனும் இணையத்தொடுப்பில் வழியே இணையத்தில் தரவிறக்கி வாசிக்க முடியும்.**

இலங்கைத்தீவில் 7வது பெரிய நீர்த்தேக்கமாக இரணைமடு உள்ளது. இரணைமடு என்ற பெயர் அது இயற்கையாக கனகராயன் ஆறு பண்டைக்காலத்தில் இரு குளங்களாக இருந்ததன் அடிப்படையில் வந்தது. 'இரணை' என்றால் தமிழ் இரண்டு என அர்த்தம், மடு என்பது குளம். வண்டல் வெளியான இரணைமடு படுகை தொல்லியல் மையமாகவும் உள்ளது. 3000 ஆண்டுகள் தொன்மையான தொல்பொருட்களும் இரணைமடு படுகையில் உள்ளன.

ஆங்கிலேயே ஆட்சிக் காலத்தில் இரணைமடு படுகையில் கனடா- பிரிட்டிஷ் அதிகாரியான சேர் ஹென்றி பாட் 1885ல் அப்போதைய பிரிட்டிஷ் அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்த்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தார். 1866ல் பிரித்தானிய நீர்ப்பாசன பொறியியலாளரும் தொல் பொருள் தேடலாளருமான ஹென்றி பாக்கர் இரணைமடு நீர்த்தேக்கத்துக்கான திட்டத்தை வரைந்தார். அவரின் திட்டத்தில் இரணைமடுவின் கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. 1900ல் நீர்ப்பாசன பிரிட்டிஷ் பொறியியலாளர் W.பிரெளன் வரும் வரை இரணைமடு கட்டுமானம் வரைவு மட்டத்திலேயே இருந்தது. பொறியியலாளர் பிரெளன் அப்போதிருந்த கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த வெற்றிவேலு என்பவரைச் சந்தித்து இரணைமடு படுகை காட்டை முழுமையாக ஆராய்ந்தார்.

இரணைமடு கட்டுமானத்தை மேற்கொள்ள பெரும் மனித வலு வேண்டும் என்பதற்காக ஒரு குடியிருப்பை நிறுவும் முயற்சியில் முதலில் பிரெளன் ஈடுபட்டார். இவர் தற்போது கிளிநொச்சி நகரிலுள்ள 'ரை' ஆறு குளம் என்ற தேக்கத்தை உருவாக்கி அதன் கீழ் மக்கள் குடியிருப்பை உருவாக்கினார். இந்த 'ரை' ஆறு குடியிருப்பு, குஞ்சுப்பரந்தனிலிருந்த எம் மக்களின் முழுமையான வியர்வையால் 1902ல் கட்டப்படத் தொடங்கியது. 1920 ல் 19 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி, ஆழம் 22 அடி. 1954ல் இரண்டாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன் மூலம் குளத்தின் நீர்மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. 3 ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975ல் நடைபெற்றது. 1977ல் முழுமையடைந்த அக்கொள்ளளவு அதிகரிப்பின் போது இரணைமடுவின் கொள்ளளவு 1 லட்சத்து 6500 ஏக்கர் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும். அண்மையில் நீர்மட்ட ஆழம் 36 அடியாக உயர்த்தப்பட்டது. இந்த அதிகரிப்பின் மூலம் குளத்தின் கொள்ளளவு 1 லட்சத்து 19600 ஏக்கர் அடியாகியிருக்கின்றது.

227 சதுரமைல்கள் நீரேந்து பரப்பு கொண்ட இரணைமடு கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இதன்மூலம் 20 882 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெற்றுள்ளது. இடதுகரை, வலதுகரை என இரு வாய்க்கால்களைக் கொண்ட இரணைமடுவின் இடது கரையில் ஊட்டக்குளமான கிளிநொச்சிக்குளம் அல்லது ரை ஆறு குளம் உள்ளது. இதிலிருந்துதான் கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் முன்னர் நடைபெற்றது. . இதைவிடத் திருவையாறு என்ற மேட்டு நீர் பாசன குடியிருப்பு பயிர்செய் நிலங்களுக்கான ஏற்றுப்பாசன பம்பி இடது கரையில் இருக்கின்றது. வலதுகரையில் ஊரியான் குளம் அதன் ஊட்டக் குளமாக உள்ளது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது. இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன.

இரணைமடு இலங்கையின் வடக்கில் உள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கம். முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பகுதியில் உள்ள இந்த நீர்த்தேக்கத்துக்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து நீர் வருகிறது. ஆனால் இந்தக் குளத்தின் பாசன நீர் மற்றும் பயன்பாட்டு நீர் கிளிநொச்சி மாவட்டத்திற்கே செல்கிறது. 1912ல் தொடங்கி 1922ல் கட்டி முடிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கம், அன்று பிரிட்டிஷ் ஆட்சியில் அரசியலில் செல்வாக்காக இருந்த சேர். பொன். இராமநாதனின் பரிந்துரையில் அவருடைய 1000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்காகக் கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டும் பணியில் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பின்னர் அது படிப்படியாக விரிவாக்கப்பட்டு இப்பொழுதுள்ள ஒரு லட்சத்து அறுபது ஆயிரம் ஹெக்டர் நீர்ப் பரப்பளவைப் பெற்றுள்ளது. இந்தக் குளத்தில் இருந்தே கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பகுதியில் நெற்பயிரிடல் மேற் கொள்ளப்படுகிறது.

இந்த நீர்த்தேக்கத்தின் தென்பகுதியில் உள்ள அம்பகாமம் என்ற காட்டுப்பிரதேசத்தில்தான் விடுதலைப் புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் 1975 காலப்பகுதியில் இருந்துள்ளது. வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவத்தின் பெருஞ்சமரான ஜெயசிக்குறு நடவடிக்கையில் இந்தக் குளம் மட்டுமே படையினரால் கைப்பற்றப்படாமல் இருந்தது. இந்தக் குளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள அணைக்கட்டின் வழியாகவே கிழக்கு வன்னிக்கும் மேற்கு வன்னிக்குமான பயணங்களும் தொடர்பும் நடந்தன. இந்த நீர்த்தேக்கத்தில்தான் 2002இல் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும் அவருடைய துணைவி அடேல் பாலசிங்கமும் விமானத்தில் வந்து இறங்கினர். பாலசிங்கம் தம்பதிகளை விடுதலைப் புலிகளின் தலைவரும் அவருடைய மனைவி மதிவதனியும், புலிகளின் தளபதிகளும், பொறுப்பாளர்களும் வரவேற்றனர். இந்த நீர்த்தேக்கத்தின் மேற்கே கிளிநொச்சி நகர் உள்ளது. கிழக்கே விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை இருந்தது. இப்பொழுது இந்த விமான ஓடுபாதையை படையினர் தமது கட்டுப்பாட்டில் எடுத்துப் புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள். போர் முடிந்த பிறகு இந்த நீர்த்தேக்கத்திற்கு இலங்கையின் அதிபர் மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்திருந்தார். நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் உள்ள படைத்துறைத் தலைமையகத்தில் இலங்கையின் மந்திரிசபைக் கூட்டத்தை நடத்தினார். இலங்கையின் வரலாற்றில் வடக்கில் நடத்தப்பட்ட முதலாவது மந்திரிசபைக் கூட்டம் இதுவாகும்.

நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் இப்பொழுது இலங்கை இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான படைத்துறைச் செயலகம் உள்ளது. இதை அண்மித்த பகுதியில்தான் செஞ்சோலை சிறுவர் இல்லம் உள்ளது. முன்னர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் ஜெனனி என்ற மூத்த பெண் போராளியின் பொறுப்பில் இருந்த இந்த இல்லத்தை இப்பொழுது நிர்வகித்து வருபவர் விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளரான கே.பி என்ற குமரன் பத்மநாதன். இரணைமடுவுக்கு மேற்கே உள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமும் பொறியியற் பீடமும். போரினால் பாதிக்கப்பட்டிருந்த கட்டடங்களை மீளப் புனரமைத்து புதிதாக மேலும் கட்டடங்களை உருவாக்கி வருகிறார்கள். இங்குள்ள கலாச்சார மையத்தை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசு நிதி உதவி அளித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்துக்கும் புனரமைப்புக்கும் கூட இந்திய அரசு உதவியிருக்கிறது. இரணைமடுவை ஆதாரமாகக் கொண்டே கிளிநொச்சியின் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகத்தைச் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்த எதிர்ப்பை கிளிநொச்சியில் உள்ள இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் பயிர் செய்யும் விவசாயிகள் முன்னெடுத்து வருகிறார்கள். இதற்கான பின்னணியில் உள்ளூர் அரசியல்வாதிகள் சிலர் இயங்குகிறார்கள். குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளில் சிலர் எதிர்ப்பு அலையை உருவாக்கி வருகிறார்கள். இதேவேளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிப்பொறுப்பில் இருந்த முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா போன்றவர்கள் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர்த் திட்டத்துக்கு ஆதரவளிக்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாண நகர் போன்ற இடங்களில் நீர்ப்பிரச்சினை உண்டு. இங்கே நல்ல தண்ணீரைப் பெறுவதற்காகத் தலைமுறை தலைமுறையாக மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள். இதற்குத் தீர்வுகாணும் நோக்கில் இரணைமடு நீர்த்தேக்கத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிநீரை மட்டும் பெறும் திட்டம் உருவாக்கப்பட்டது. திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிக்கடன் திட்டத்தின்கீழ் இரண்டு ஆயிரத்து முன்னூறு கோடி இலங்கை ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாயிகளின் ஒப்புதலும் வேண்டும். ஆனால் விவசாயிகள் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் காலப்பகுதி முடிவடைகிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துத் திட்டத்திலிருந்து பின்வாங்கப் போவதாக எச்சரித்துள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் - இப்போதுள்ள நீர்த்தேக்கத்தை மேலும் விரிவுபடுத்தி, அணைக்கட்டை மேலும் உயர்த்தி அதிகளவு நீரைத் தேக்குவதாகும். அப்படித் தேக்கப்படும் கூடுதலான நீரில் இருந்து 12 சதவீதம் நீரை மட்டுமே யாழ்ப்பாணத்தின் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்துவதாகும். விவசாயிகளின் எதிர்ப்புக்குக் காரணம் - விவசாயத்துக்கான பாசனத்துக்கு நீர் போதாமையாகிவிடும் என்ற அச்சம்.

நீர் மேலாண்மை அடிப்படையில் குடிநீரும் விவசாயத்துக்கான பாசன நீரும் உரியமுறையில் பகிரப்பட வேண்டும். இதுவே தேசிய நீர்ப்பங்கீட்டுக் கொள்கையாகும். அத்துடன் நீர்த்தேக்கத்தைப் புனரமைத்து விரிவாக்கம் செய்து, அதிகளவு நீரைத் தேக்கிய பின்னரே குடிநீர் பெறப்படும். இதில் விவசாயிகளின் நலன் 100 சதவீதம் பாதுகாக்கப்படும்.

ஆனால் இதை ஊடகங்களும் அரசியல்வாதிகளும் தத்தம் நலன்சார்ந்து பெரும் விவகாரமாக்கி விட்டனர். தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் திட்டத்தை மாற்று ஏற்பாடாக நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித் துள்ளது. இரணைமடு நீர்த்தேக்கத்தைத் தனியாகப் புனரமைப்பது என்றும் யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கடல்நீரை நன்னீராக மாற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கடல்நீரை நன்னீராக மாற்றுவது பற்றியே பேசப்பட்டதாகவும் இரணைமடு நீர்த்தேக்கத்தைப் புனரமைப்பதைப்பற்றிப் பேசப்பட்ட போது ஆசிய அபிவிருத்தி வங்கி அதற்கு இணங்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளாக இரணைமடு நீர்விநியோகம் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாசன நீர், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்ப் பிரச்சினைகளை நீக்க இத்திட்டம் நிறைவேறுவது அவசியம். இத்திட்டம் விவசாயிகளின் ஒப்புதலுடன் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுவது வடமாகாண அரசின் கையில் உள்ளது. மக்களின் வாழ்வாதாரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வடமாகாண தமிழ் மக்கள் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும். மாகாண அரசு இப்பிரச்சனைக்குத் தீர்வு காணாவிடில் இலங்கை அரசு இரணைமடுவை கையகப்படுத்தி தேசிய நீர் மேலாண்மை கொள்கையின் அடிப்படையில் தீர்வுகாணும் சாத்தியமும் உண்டு. இதனால் மாகாண அரசுகள் மேலும் பலவீனமடைந்து அதிகாரம் மைய அரசிடம் குவியவே இது வழிவகுக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமா கடலைச் சூழும் போர்மேகங்கள்

## ஈழவர் இடர்தீர விதி செய்யுமா!

இலங்கை தீவு அமைவிடம் காரணமாக உலக ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் - பொருளாதார - இராணுவ ரீதியான மோதல் களமாகியிருக்கும் தீவாகும். இங்கு நிலவும் இனத்துவ முரண்பாடானது ஏகாபத்தியங்கள், எல்லா வகையிலும் தலையீடுகளை செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டியும், அவர்களின் தலையீடும் ஈழவர்களின் உடைமைப்பாட்டுப் போராட்டத்தில் தவிர்க்க முடியாத வகையில் தாக்கம் செலுத்தும் காரணியாகும்.

உலகில் இரண்டு ஏகாதிபத்திய அரசுக்கள் சமநிலையான பொருளாதார ஆதிக்கத்தை அடையும் சந்தர்ப்பங்களில் எல்லாம் உலகப் போர் ஒன்றின் மூலம் தனி ஏகாதிபத்திய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அமெரிக்கா – சீனா இடையே தீவிரமடையும் பொருளாதார ஆதிக்க போட்டி மூன்றாவது உலக யுத்தத்துக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்து வருகின்றது.


அமெரிக்கா – சீனாவுக்கு இடையில் போர் மூளும் எனில் இலங்கை தீவின் அமைவிடம் மிக முக்கியமான காரணியாக அமையும். எனவே சீனாவும் - அமெரிக்காவும் இலங்கையில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளும் நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவர்கள் உள்நாட்டு முரண்பாடுகளையும் கையாள முயல்கின்றமை ஒன்றும் இரகசியமானதல்ல. இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்களும், ‘சர்வதேசத்தின் கவனம் எம்மீது அதிகமாக திரும்பியுள்ளது’ என அண்மையில் கூறியிருந்தார்.

இலங்கையில் ரணில் விக்கரமசிங்க தலைமையிலானவர்கள் அமெரிக்க அரசுக்கு ஆதரவாகவும், இராசபக்ச தலைமையிலான பிரிவினர் சீன அரசுக்கு சார்பாகவும் தெளிவாகச் செயல்படுகின்றார்கள். ஏகாதிபத்திய நாடுகளின் இந்நகர்வுகளையும் போக்குகளையும் ஈழவர்கள் சரியாக உள்வாங்கி செயல்படுவது மூலமே எமது உடைமைப்பாட்டு போராட்டத்தை முன்னெடுக்கவும் தக்க வைக்கவும் முடியும் என்பது 30 வருட கால போராட்டத்தின் பட்டறிவாகும்.

கடந்த வருட இறுதிப்பகுதியில் மாலைதீவில் சீனசார்பு அரசாங்கம் கவிழ்க்கபட்டு அமெரிக்கச் சார்பு அரசாங்கம் உருவாக்கப்பட்டமை, இலங்கையில் அமெரிக்க சார்பு அரசாங்கத்தைக் கவிழ்த்து, சீன சார்பு அரசாங்கத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சி, அமெரிக்கா அரசு ஆசியாவில் ஆதிகத்தை நிலைநாட்டுவதற்காக நிறைவேற்றிய சட்டம் என பல தொடரான நிகழ்வுகள் நடந்திருந்தன. இருந்தபோதும் சனவரி மாதம் கட்டுநாயக்கா விமானநிலையம் ஊடாக அமெரிக்க கடற்படை கப்பலுக்கு விநியோகங்கள் செய்யப் பட்டமையை தொடர்ந்து, இந்துமா கடலை சூழும் போர் அபாயங்கள் குறித்த உரையாடல்கள் அதிகமாகியுள்ளன.

சனவரி மாதம் 24ம் திகதி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய அமெரிக்காவுக்கு சொந்தமான சி2ஏ ஹெர்குயுலியஸ் எனும் விமானத்தை, இலங்கை சுங்க திணைக்கள அதிகாரிகள் சோதனையிட அனுமதிக்கப்படவில்லை. சாதாரணமாக தூதரகங்களுக்கு சோதனையின்றி பொருட்களைக் கொண்டு செல்லும் விசேட ஏற்பாடு உண்டு. ஆனால் குறித்த விமானத்திலிருந்த பொருட்கள் அமெரிக்காவுக்கு சொந்தமான சிறிய ரக படைத்துறை போக்குவரத்து விமானமான ஏ2ஏ கிரேஹவுன்ட் விமானம் மூலம் திருகோணமலை துறைமுகத்துக்கு அருகில் தரித்து நிற்கும் அமெரிக்காவின் யுஎஸ்எஸ் ஜோன் சி. ஸ்டெனிஸ் எனும் போர்க் கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த விடயம் ஊடகங்களில் வெளிவந்த பின்னர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஹலைனா டப்ளிஸ் இது இலங்கை அமெரிக்கச் சேவை




ஒத்துழைப்பு உடன்பாட்டின் பிரகாரம் நடைபெறும் ஒன்றெனவும், இதற்கு முன்னதாக 2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதமும் இருதடவைகள் இது போன்று பொருட்கள் ஏற்றி இறக்கப்பட்டன என்றும் அறிக்கை விட்டிருந்தார்.

இதன் பின்னரே இந்த இராணுவ நோக்கிலான பண்ட போக்குவரத்தானது 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் திகதி இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராசபக்சவுக்கும், அப்போதைய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ரொபர்ட் ஒ பிளக் ஆகியோரிடையே கைச்சாத்திடப்பட்ட ‘கையகப் படுத்தல் மற்றும் இடைச்சேவைகள் ஒப்பந்தத்தின்’ பிரகாரமே நடைபெற்றமை தெரியவந்தது. 2007 ஆம் ஆண்டு பகுதியிலேயே சிறிலங்கா அரசு வன்னி பகுதி மீதான இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. இந்த காலப் பகுதியில் அமெரிக்கச் சார்பு தரப்புகளினால், கடற்புலிகள் பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற கருத்துகளும் பரவலாக வெளிப்படுத்தப்பட்டன.

இந்த ஒப்பந்தம் 10 வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் வகையிலேயே கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், கடந்த 2017ம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கரமசிங்கவால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரம் மூலம் ஒப்பந்தத்தை திருத்தம் செய்து நீடித்தார். இதன் பிரகாரம் குறித்த ஒப்பந்தம் காலவரையின்றி நீடிக்கப்பட்டது. ஏதேனும் ஒரு தரப்பு ஒப்பந்தத்திலிருந்து விலக வேண்டுமெனில் 3 மாதங்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இவ் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன என்பது குறித்து இதுவரைக்காலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ராசபக்ச ஆட்சி காலத்தில் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு பகிரங்கப் படுத்துமாறு கோரப்பட்ட போதிலும், அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

எனவே, 12 வருடங்களாக நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன என்பதை ஒரு சிலர் மட்டும் தான் அறிவார்கள். ஆனால்,; அமெரிக்க அரசு பிலிப்பைன்ஸ், தென்கொரியா போன்ற நாடுகளுடன் செய்து கொண்டுள்ள இதே வகையான ஒப்பந்தங்களின் துணை கொண்டும், சிறிலங்கா அரசு வெளியிட்ட தகவல்களையும் கொண்டும் என்ன விடயம் உள்ளடங்கி இருக்கும் என்பதை இலகுவாகக் கூறிட முடியும்.

அந்த வகையில், அமெரிக்கா அரசு இந்துமாக் கடலில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவர்களுக்கு இலங்கையின் துறைமுகங்கள், விமான நிலையங்கள், வைத்திய சாலைகள் போன்ற அனைத்தையும் இராணுவ தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும். அதே போல் சிறிலங்கா அரசு அத்திலாந்திக் கடலில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவர்களின் வைத்யசாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்களைப் பயன்படுத்த முடியும் என்பதே குறித்த ஒப்பந்தமாகும்.

எனவே, ரணில் விக்ரமசிங்க இந்த ஒப்ந்தத்தைக் காலவரையின்றி நீடித்திருப்பதானது, ஐதேக அரசாங்கம் அமெரிக்கச் சார்பு அரசாங்கமாக செயல்படுவதை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31 திகதி ஆசியாவில் அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. சட்டம் நிறைவேற்றப்பட்டு 21 தினங்களிலேயே மேற்கூறிய சர்ச்சைக்குரிய விநியோக நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. அண்மைக் காலமாக அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் இந்து சமுத்திரம் நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் போர்நடவடிக்கைகளின் போது வைத்திய சேவை வழங்குவதற்காக உருவாகக்கப்பட்டிருக்கும் யு.எஸ். மேர்சி எனும் கப்பலும், யு.எஸ்.எஸ் ப்போல் ரிவர் எனும் போர்நடவடிக்கை கப்பலும் இலங்கைக்கு வந்து சென்றமை சில உதாரணங்கள் ஆகும்.

எனினும் இவை தீடிரென நடந்த நிகழ்வுகள் அல்ல. அமெரிக்காவும், சீனாவும் ஆசியாவில் தமது ஆதிகத்தை நிலைநாட்டுவதற்கான சர்வதேச வேலைத் திட்டங்களை ஏலவே தீட்டி வைத்துள்ளன. சீனா *ஒரே மார்க்கம் ஒரே பாதை* அல்லது *பட்டுபாதை* எனும் திட்டத்தையும், அமெரிக்கா *ஆசியாவில் மையம் கொள்ளல்* எனும் திட்டத்தையும் தீட்டி வைத்துள்ளன.

சீன அரசு அவர்களின் பட்டுபாதை திட்டத்தை நடைமுறைப்படுத்த முத்து சரங்கள் எனும் இராணுவ மேலாட்சி திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். இத்திட்டத்தின் படி மியன்மார் கிரா நீர்பாதை, தாய்லாந்தின் லாம்சபாங் துறைமுகம், பாகிஸ்தானின் கவடார் துறைமுகம், இலங்கையின் அம்பாந்தோட்டை, மாலைத்தீவு ஆகிய இடங்களை முத்துக்கள் போன்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அடையாளப்படுத்தியுள்ளார்கள். அந்த இடங்களில் சீனாவின் ஆதிக்கத்ததை நிலைநாட்டி வருகின்றார்கள். இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மானிக்க உதவியதன் மூலம் இலவசமாக பயன்படுத்தும் வாய்ப்பை உருவாக்கி கொண்டார்கள். கடந்த கூட்டரசாங்கம் துறைமுகத்தை நடாத்தி செல்ல முடியாத பொறியில் சிக்கி சீனாவுக்கே துறைமுகத்தை தாரை வார்த்தது. இதற்கெதிராக அமெரிக்காவின் துணை சனாதிபதி பென்ஸ் ‘இந்துமாக் கடலில் சீனாவுடனான யுத்தத்தின் போது, அம்பாந்தோட்டை துறைமுகம் அமெரிக்காவுக்கு எதிரான சீனாவின் முக்கிய தளமாக இருக்கும்’ என எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார்.

அமெரிக்கா ஆசியாவில் மையம் கொள்ளல் எனும் திட்டத்தின் படி, சீனாவைச் சுற்றி எதிரிநாடுகளை உருவாக்குக்கி, எதிரிகளால் சுற்றி வளைத்து வருகின்றது. சீனா முத்துக்கள் என அடையாளப்படுத்தி வைத்திருக்கும் இடங்கள் அமைந்திருக்கும் நாடுகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் சீனாவின் திட்டத்தை முறியடிக்கும் நகர்வையும் செய்து வருகின்றது.

இதன் அடிப்படையிலேயே ஜப்பான், பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, தென்கொரியா, வியட்நாம் போன்ற சீனாவின் அயல்நாடுகளைச் சீனாவின் எதிரி நாடுகளாக்கப் பட்டிருக்கின்றது. தற்சமயம் தென்கொரியாவிலும், ஜப்பானின் ஒக்கினோவிலும் அமெரிக்க துருப்பினர் நிலைக் கொண்டுள்ளனர். வியட்நாம், பிலிப்பைன்ஸ் நாடுகள் அமெரிக்காவின் போர்ப்பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அவுஸ்திரேலியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுள்ளது. சீனாவை எதிரிகளால் சுற்றிவளைக்கும் அதே சமயம், சீனாவின் பட்டுபாதை திட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருக்கும் நாடுகளை தமது கட்டுபாட்டில் கொண்டுவர அமெரிக்கா முயல்கிறது.

அதன் படியே தாய்லாந்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சீன சார்பு அரசாங்கத்தை, இராணுவ சதி மூலம் கவிழ்த்து அமெரிக்க சார்பு இராணுவ ஆட்சி உருவானது. அதற்கு முரணாக மியன்மாரிலிருக்கும் சீனசார்பு இராணுவ ஆட்சிக்கு எதிராக ஆங்சாங் சூகி தலைமையிலான தரப்பினருக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகின்றது. இந்நிலையில் கடந்த வருட செப்டம்பர் மாதம் மாலைத்தீவு சனாதிபதி தேர்தலில் சீன சார்பு சனாதிபதி தோற்கடிக்கப்பட்டு, அமெரிக்க சார்பு சனாதிபதி ஒருவர் அமெரிக்காவின் ஆதரவுடன் வெற்றி பெற்றார்.

இதற்குப் பதிலடியாகவே சரியாக ஒரு மாத காலத்தின் பின் ஒக்டோபர் 26 அன்று இலங்கையில் சீன சார்பு மகிந்த இராசபக்சவை ஆட்சியில் அமர்த்தும் முயற்சி சீனாவின் பின்புல ஆதரவுடன் நடந்தது. ஆட்சி மாற்ற சதி நடந்த காலப் பகுதியில் அமெரிக்க - அமெரிக்க சார்பு நாடுகளின் தூதுவராலயங்களும், சீன தூதுவராலயமும் நடந்து கொண்ட விடயங்கள் இதை தெளிவாக வெளிக்காட்டியிருந்தன.

இந்த ஆட்சிமாற்ற சதி காலத்திலேயே அமெரிக்க சார்பு மாலைத்தீவு சனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு நடந்தது. இந்நிகழ்வுக்கு சனாதிபதியோ, அச்சமயத்தில் பிரதமராக இருந்த மகிந்த ராசபக்சவோ அழைக்கபடாது, அமெரிக்க ஆதரவு முன்னாள் சனாதிபதி சந்திரிக்காவும், ரணில் விக்கிரமசிங்க தரப்பினரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். வலிந்து அழைப்பைப் பெற்றுக்கொண்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகிந்த தரப்பினரின் சகாக்களுக்கு நிகழ்வில் பின்வரிசை இடமே வழங்கப்பட்டிருந்தது. இச்சம்பவம், மகிந்த ராசபக்சவை மாலைத்தீவு நாடு கூட பிரதமராக ஏற்கவில்லை என பிரச்சாரபடுத்தப்பட்டது. இதன் பின்னனியில் அமெரிக்காவின் ராஜதந்திரிகள் இருந்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவான விடயமாகும்.


இந்நிலைமையிலேயே இந்துமாக்கடல் பகுதியிலும், இலங்கையிலும் அமெரிக்க – சீன ஆதிக்க போட்டியும் நகர்வுகளும் எதிர்வரும் காலங்களில் தீவிரமடையும் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க ராஜதந்திரி, இலங்கையை இந்துமாக் கடலில் இராணுவ நடவடிக்கைகக்குப் பயன்படுத்துவோம் என பகிரங்கமாகக் கூறியமை இதை மேலும் உறுதிபடுத்தியிருக்கின்றது. இலங்கையின் அமைவிடத்துக்கும் மேலாக, திருகோணமலையில் அமைந்திருக்கும் இயற்கை துறைமுகம் அதி முக்கியத்துவம் வாய்ந்த தளமாகின்றது. திருமலை உலகில் இரண்டாவது ஆழமான இயற்கை துறைமுகமாகும். எதிரிகளின் கண்காணிப்பிலிருந்து மறைந்து போர்க்கலங்களை தரித்து வைத்திருக்கக் கூடிய இயற்கையான கட்டமைப்பையும்திருமலைதுறைமுகம் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகத் திருமலை துறைமுகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஏகாதிபத்திய நாடுகள் போட்டி போடுகின்றன.

திருமலை துறைமுகமானது தமிழர்களின் பாரம்பரிய வாழ்விட பகுதியில் அமைந்திருப்பதானது, ஈழவர்களுக்கு மிகவும் வரபிரசாதமான விடயமாகும். ஈழப்போராட்டமானது சர்வதேச கவனத்தை ஈர்த்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இதன் காரணமாகவே, ஈழப்புரட்சி அமைப்பை நிறுவியவரும், ஈழவர் 'இடர் தீர' எனும் ஈழப்போராட்ட சித்தாந்த நூலை எழுதியவருமான இளைய தம்பி இரட்ண சபாபதி அவர்கள் 'திருகோணமலையில் ஈழவர்களின் ஆதிக்கம் எந்தளவில் தக்கவைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தளவில் ஈழவர்களின் இருப்பும், போராட்டமும் நிலைத்திருக்கும்' என்றார். (ஈரோஸ் அமைப்பு 1990 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு விட்டது. தற்சமயம் ஈரோஸ் எனும் அமைப்பு சிறிலங்கா பேரினவாத அரசின் ஏற்பாட்டில் மக்கள் விரோத அமைப்பாகவே இயங்கி வருகின்றது). அதாவது ஈழவர்கள் திருகோணமலையில் அரசியல், பொருளாதார, சமூக ரீதியான ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் போது, ஏகாதிபத்தியங்களோ, சிறிலங்கா அனுசரனையுடன் தன்னிச்சையாகத் திருமலை துறைமுகத்தில் ஆதிக்கம் செலுத்த முடியாது. ஈழவர்களின் பிரச்சினையில் நியாயமான நிலைப்பாட்டை எடுக்காமல் அவர்களது நலன்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

இதைச் சிறிலங்கா அரசு நன்கு அறிந்தமையாலேயே, திருகோணமலையில் ஈழவர்களின் தனியாதிக்கத்தை ஒழித்துக்கட்டி, சிங்கள மயமாக்கும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனவே, இந்து மா கடலில் உருவாகியிருக்கும் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான மோதல் நிலைமைகளில் எமது அபிலாசைகளை நாம் அடைந்து கொள்ளும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள வேண்டுமெனில் திருகோணமலையில் ஈழவர்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது மிக அவசியமானதாகும். அவ் ஆதிக்கம் அரசியல் - சமூகம் - பொருளாதாரம் என அனைத்து தளங்களிலும் பரந்ததாக அமைய வேண்டும். எனவே தான் இலங்கை தமிழ் பேசும் சமூகங்கள் சாதி- மத – பிரதேச பேதங்களை மறந்து ஈழவராய் இணைந்து திருமலையில் தம் ஆதிகத்தை நிலைநாட்டும் அசைவியக்கத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாகின்றார்கள். அவ் அசைவியக்கத்தில் நாம் அடையும் வெற்றியானது, இத்தீவில் ஈழவர்களின் இருப்பையும், வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும். ■

# அவர்களின் பத்திரிக்கையும் எங்களின் பத்திரிக்கையும்



தினசரி, வாரம், இருவாரம், மாதம் என வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிக்கைகளுக்கும், எமது மக்கள் பத்திரிக்கைக்கும் இடையில் மிக அழுத்தமான வேறுப்பாடு உண்டு.

மேற்கூறிய பத்திரிக்கைகள் அரசினால், அல்லது ஏதேனும் ஒரு வியாபார நோக்கம் கொண்ட நிறுவனங்களால் வெளியிடப்படுவதாகும். அரச பத்திரிக்கைகள் மக்களிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் அறவிடப்படும் வரிப்பணத்தின் மூலம் நடத்தப்படுவதாகும். இப்பத்திரிக்கைகள் எவரின் சொந்தப் பணத்திலும் நடத்தப்படுவதில்லை. மக்களின் பணத்தில் நடத்தப்படும் பத்திரிக்கைகள் அரசாங்கத்தின் பிரச்சாரத்திற்காகவும், அரசாங்கம் தொடர்பான நன்மதிப்புக்களை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்க்கட்சிகள் மீது அவதூறு பரப்புவதற்காகவும், மக்களை உண்மையான நெருக்கடிகளிலிருந்து திசைதிருப்புவதற்காகவுமே அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றது. தினசரி இதழாகவும், ஞாயிறு சிறப்பிதழாகவும் வெளிவரும் தினகரன் பத்திரிக்கை இவ்வாறு சிறிலங்கா அரசால் நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான பத்தரிக்கையாகும்.

தினகரன் பத்திரிக்கை அதன் வரலாறு முழுவதிலும், பேரினவாதத்துக்கு எதிரான தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கும், பேரினவாதத்தின் ஊதுகுழலாகவே செயல்பட்டது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைப் பேசிய பத்திரிக்கையாகவோ, கலைகலாசார அம்சங்களையும், மக்களின் சிந்தனைகளையும் மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கிய பத்திரிக்கையாகவோ இருக்கவில்லை. இதன் காரணமாகத் தான் இந்த பத்திரிக்கை வெள்ளிக்கிழமைகளில் இணைப்பாக வரும் அரச வர்த்தமானியை வாசிப்பதற்காக மட்டுமே வாங்கப்படும் பத்திரிக்கையாகவிருக்கின்றது.

அரச பத்திரிக்கைகளை விடத் தனியார் நிறுவனங்களால் நடாத்தப்படும் பத்திரிக்கைகள் மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கு செலுத்தும் பத்திரிக்கைகளாக இருக்கின்றன. இப்பத்திரிக்கைகளின் முதன்மையான நோக்கம் வியாபாரமாகும். பத்திரிக்கை விற்பனை மூலம் இலாபம் கிடைக்காவிடின் இப்பத்திரிக்கைகள் இழுத்து மூடப்படும். வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிக்கைகள் பிரபலமான தமிழ் மொழி வணிக பத்திரிக்கைகளாகும். தமிழ்மிரர், உதயன் ஆகிய பத்திரிக்கைகளும் கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ள பத்திரிக்கைகளாகும். இந்த பத்திரிக்கை நிறுவனங்கள் பத்திரிக்கை விற்பனை மூலமும், விளம்பரங்கள் மூலமும் சட்ட ரீதியான வருமானத்தை ஈட்டுகின்றன.

மக்கள் மத்தியில் செல்வாக்கைக் கொண்டுள்ள பத்திரிக்கைகள் அரசியல்வாதிகளின், கட்சிகளின், தேசிய சர்வதேசிய அரசுகளின் அரசியல் நிகழ்ச்சி திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டுச்செல்ல துணை போவதின் மூலமும் கணக்கில் காட்டப்படாத வருமானத்தை ஈட்டிக் கொள்வது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இந்த பத்திரிக்கைகள் வணிக நிறுவனங்களுக்கோ, அல்லது அரசியல்வாதிகளுக்கோ நேரடியாக அல்லது மறைமுகமாக சொந்தமாக உள்ளது. உதாரணமாக உதயன் பத்திரிக்கை தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரவனபவனுக்குச் சொந்தமானதாகும். தமிழ் மிரர் பத்திரிக்கையை வெளியிடும் விஜய நிவுஸ் பேப்பர்ஸ் கம்பனி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் குடும்பத்தினருக்கு சொந்தமானதாகும்.

வீரகேசரி பத்திரிக்கையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர் நிறுவனம் இலங்கையின் பிரதான 6 தமிழ் பணக்கார குடும்பங்களுக்குச் சொந்தமானதாகும். இந்த நிறுவனம் தினக்குரல் பத்திரிக்கையை வெளியிடும் ஆசியன் மீடியா பப்ளிகேசன், நிறுவனத்தின் 69 சதவீதமான பங்குகளை உரிமையாக்கியுள்ளது. இந்நிறுவனத்தின் மிகுதி பங்குகள் மூன்று தமிழ் செல்வந்த குடும்பங்களுக்குச் சொந்தமான வீரா ஹொல்டிங் கம்பனிக்கு சொந்தமாக உள்ளது.

தினக்குரல், வீரக்கேசரி பத்திரிக்கைகளில் பங்குதாரர்களிலேயே அதிகபடியான பங்குகளைச் சொந்தமாக்கி இருப்பது, மத்திய வங்கி பிணை மோசடியில் சிக்கிய அர்ஜீன் அலோசியஸ் குடும்பமாகும். இவர்கள் 118 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்தாக செய்திகள் அண்மையில் வெளிவந்திருந்தது.

பிரதான வணிக பத்திரிக்கைகளுக்குப் புறம்பாக, இன்று இலங்கை தமிழ் சூழலில் வெளிவரும் பத்திரிக்கைகளின் புதிய வகைப்பாட்டையும் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரலை ஆயுதம் மூலம் நசுக்கியிருந்தாலும், சமூகத்திலிருந்தும் மக்களின் மனதிலிருந்தும் சுதந்திர வேட்கையை அழித்துவிட முடியவில்லை.

இதன் காரணமாகவே, பெரும் மக்கள் அழிப்பைநாடாத்தியயுத்தத்துக்குதலைமைதாங்கிய, மகிந்த ராசபக்சவை தமிழ் பேசும் மக்கள் தேர்தலில் மண்கவ்வச் செய்தனர். இதனையே 'ஈழத்தின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டேன்' என மகிந்த ராசபக்ச கூறினார். 2009 க்கு பின்னர் மக்கள் மனங்களிலிருக்கும் சுதந்திர வேட்கையை இல்லாதொழிக்கும் வேலைத் திட்டத்தைப் பேரினவாத அரசு எல்லா வழிகளிலும் செய்ய ஆரம்பித்தது. யுத்தம் முடிந்து மக்கள் மீளக் குடியமர்த்தப்பட முன் வசந்தம் தொலைக்காட்சியை ஆரம்பித்ததும் இந்த நோக்கில் தான். தமிழ் நாதம், தமிழ் எப்.எம் போன்ற ஊடகங்கள் மகிந்த ராசபக்ச குடும்பத்தினரால் ஆரம்பிக்கப்பட்டதும் இதே நோக்கில் தான்.

இதுபோலவே அரசு பினாமிகளைக் கொண்டு பல பத்திரிக்கைகளை புதிது புதிதாக வெளியிட ஆரம்பித்துள்ளது. இன்று தமிழ்ச் சூழலில் வெளிவரும் 15க்கும் மேற்பட்ட இவ்வாறான பத்திரிக்கைகளை காணலாம். இப்பத்திரிக்கைகள் நடத்துபவர்களுக்கு எந்த வகையிலும் இலாபத்தை ஈட்டி தருபவை அல்ல. அத்துடன் மாற்று அரசியல் சிந்தனைகளை கருத்துகளைச் சொல்பவையாகவும் இருப்பதில்லை.

ஒருகூடை மாம்பழத்துடன், ஒரு அழுகிய மாம்பழத்தை வைத்து விற்றால், காலப்போக்கில் எல்லா மாம்பழங்களும் அழுகிவிடும் என்பதின் அடிப்படையிலேயே இப்பத்திரிக்கைகளின் அரசியல் உள்ளடக்கம் உள்ளது. மக்களின் சுதந்திர வேட்கையை ஒரேயடியாக எதிர்ப்பதானது அதை மேலும் மேலும் தீவிரமடையச் செய்யும் என்பதை எதிரிகள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். எனவே தான், சிறுக சிறுக மக்கள் மத்தியில் நச்சு சிந்தனைகளை விதைப்பதின் மூலம், சுதந்திரம் குறித்த சிந்தனைகளை மழுங்கடிப்பதே இந்த பத்திரிக்கைகள் வரிந்துக் கொண்டிருக்கும் மறைமுக வேலைத்திட்டமாகும்.

எனவே தான் இப்பத்திரிக்கைகள் எவ்வித தடைகளும் இன்றி தமிழீழ விடுதலை புலிகள் தொடர்பான கட்டுரைகளையும், புலிகள் அமைப்பின் தலைவரின் படங்களையும் தாராளமாகப் பயன்படுத்த முடிகிறது. ஆனால், சாதாரண மக்கள் எவரும் புலிகளின் சின்னங்கள், தலைவர்களின் படங்களை தவறுதலாக கையடக்க தொலைப்பேசியில் வைத்திருந்தாலும், பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவார்கள். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் வெளியிட்ட பாடல்களை கையடக்க தொலைபேசியில் தரவிறக்கி வைத்திருந்தமையால் கைதுசெய்யப்பட்ட சம்பங்களும் நடந்திருந்தன.

எனில், இப்பத்திரிக்கை உரிமையாளர்களின் பின்னால் மறைந்திருக்கும் கரங்கள் யாருடையவை என்பதை ஊகித்து அறிந்து கொள்ள முடியும்.

எனவே, இந்த பத்திரிக்கைகள் யாரின் நலன்களுக்கும் , பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். எத்தனை நேர்மையான ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்களினாலும் இந்த ஊடக உரிமையாளர்களின் நலன்களுக்கு பாதகமாக எதையும் செய்திட முடியாது.

இந்த பின்னணியில் தான் பொது மக்களை பங்குதாரராக்கி, மக்களால் கண்காணிக்கப்பட்டு வழிநடத்தப்படும் பத்திரிக்கையாக மக்கள் பத்திரிக்கை வெளிவருகின்றது.
இப்பத்திரிக்கை எதிர்வரும் நாட்களில் மக்களில் கணிசமானோரை இணைத்து கொண்டு நிறுவனமாகக் கட்டமைக்கப்படும். எமது நோக்கம் அனைத்து தமிழ் பேசும் மக்களையும், சம பங்குதாரராக இணைத்துக் கொள்வது தான். மக்களின் பங்களிப்பிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

இப்படியான மக்களின் பத்திரிக்கையாக இருக்கக் கூடிய பத்திரிக்கை ஒன்றினாலேயே, தற்போதிருக்கும் பத்திரிக்கைகள் மக்கள் சார்பாகச் செய்யத் தவறியவற்றை செய்ய முடியும், மக்களுக்கு விரோதமாகச் செய்பவற்றை அம்பலப் படுத்த முடியும். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழவர் வாழ்வியலும் தைத்திருநாளும்



பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் மனிதர்களின் சமூக வாழ்வின் ஒரு அம்சமாகும். பண்பாட்டு வாழ்வின் ஒரு வெளிப்பாடு ஆகும். பண்டிகைகள் மனித வாழ்வை குதூகலப்படுத்துபவையாகும். வாழ்வின்மீதானபிடிப்புகளைஅதிகரிப்பவையாகும்.சமூக வாழ்வின் மீதான நம்பிக்கையை ஊக்குவிப்பவை ஆகும். சமூக உறவுகளைப் பண்படுத்துபவையாகும்.

எனினும், பலநெடுங்காலமாக எமது சமூக வாழ்வின் அம்சமாகவும், பண்பாட்டு வாழ்வின் வெளிப்பாடாகவும் இருந்த எமது பண்டிகைகள் இன்று எமக்கு சுமையாக மாறியுள்ளன. பெரும்பாலும் பண்டிகைகளை ஒருவித சலிப்புடன், சோர்வுத்தன்மையுடன் தான் எதிர்கொள்கின்றோம். சம்பிரதாயம் நிமித்தம், சமூக நிர்ப்பந்தம் நிமித்தம் இந்த பண்டிகைகளைக் கொண்டாடி விட்டுச் செல்கின்றோம்.இதன் பின்னால் பொருளாதார நெருக்கடிகள், வேலைப்பளு, காலத்திற்கு ஒவ்வாமை என பலவிதமான காரணங்கள் சொல்லப்பட்டாலும்,அனைத்துக்கும்பொதுவானஒரு உண்மையுள்ளது. பண்டிகைகள் தொடர்ந்தும் எமது சமூக வாழ்வின் ஒரு அம்சமாகவும், பண்பாட்டு வாழ்வின் வெளிப்பாடாகவும் இல்லை என்பதே அந்த உண்மையாகும்.

எமது சமூக வாழ்வு அழிந்துக் கொண்டிருக்கிறது. அல்லது சமூக வாழ்விலிருந்து நாம் அந்நியமாகியிருக்கின்றோம். பண்பாட்டு அம்சங்கள் எம்மிடமிருந்து தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். அல்லது அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த துர்நிலைமை மிக வேகமாக நடந்தேறி இருக்கின்றது. ஒரு தனிமனித வாழ்க்கை காலத்தில் இந்த மாற்றத்தை நாம் தெளிவாக அவதானிக்கும் அளவில் வேகமாக நடந்தேறியிருக்கின்றது.

இந்நிலைமையை இரண்டு காரணங்களால் நாம் அனுபவிக்க நேர்ந்துள்ளது. முதலாவது ஈழவர்களாகிய எம் மீது சிறிலங்கா பேரினவாதம் ஏவியுள்ள திட்டமிட்ட அழித்தொழிப்பு நடவடிக்கைகள். இரண்டாவது ஏகாதிபத்தியம் எம்மீது திணித்துள்ள உலகமயமாதல் எனும் அடிமை பண்பாடு. பேரினவாதம் எமது சமூக வாழ்வையும், பண்பாட்டையும் அழிப்பது மூலம் சமூகமாக நாம் எமது உரிமை கோரிக்கைகளை முன் வைப்பதை மழுங்கடித்து, எம்மை அழித்தொழிக்க முயல்கிறது. இதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நாட்டி, முழு தீவையும் சிங்களவர்களின் தனியுடைமையாக்குவதே பேரினவாதத்தின் நோக்கமாகும்.

ஏகாதிபத்தியமானது, அவர்களது வளச்சுரண்டலையும், பண்ட விற்பனையையும் மக்களின் எதிர்ப்பின்றி நாடாத்தி செல்ல, அவர்களின் பண்பாட்டைத் திணிப்பதின் மூலம் எம்மை பண்பாட்டு அடிமைகளாக்க முயல்கின்றது. இதன் மூலம் எமது பகுதிகளின் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல், இராணுவ நோக்கங்களை எதிர்ப்பின்றி அடைந்து கொள்வதே அவர்களின் நோக்கமாகும்.



எனவே, ஈழவர்கள் பேரினவாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும் ஒரே சமயத்தில் தனித் தனியாகவும், சேர்த்தும் எதிர்க்கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள். எந்த சமூக வாழ்வையும், பண்பாட்டு வாழ்வையும் சிதைத்து எம் மீது மேலாதிக்கத்தை நிலைநாட்ட நினைக்கின்றார்களோ, அந்த சமூகவாழ்வையும், பண்பாட்டு வாழ்வையும், மீட்பதும், மீளுருவாக்கம் செய்வதுமே அவர்களை எதிர்த்துத் தோற்கடிக்கும் வழியாகும்.

எமது சமூக வாழ்வையும், பண்பாட்டு வாழ்வையும் பேரினவாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும் வாழ்வியல் நடைமுறைகளூடாக எதிர்த்து நிற்கும் வகையில் நாம் மீளுருவாக்கம் செய்து கொள்ளல் வேண்டும்.

அந்த வகையில் ஈழவர்கள் பாரம்பரியமாக கொண்டாடி வரும் தைத்திருநாளை சாதி, மதம், இனம் சாராத ஈழவர்களின் தேசிய பண்டிகையாக மீளுருவாக்கம் செய்ய வேண்டியது சமகாலத்தின் தேவையாகும்.

இலங்கை தீவில் ஆதியில் எந்த அடையாளங்களுமின்றி கூட்டம் கூட்டமாக இணைந்து வாழ்ந்து வந்தார்கள். மக்களின் கூட்டுப்பாடு உறவுகளை அவர்கள் பேசிய பேச்சுக்கள் வலுப்படுத்தியது. இம்மொழி ஆரம்பத்தில் இடங்களுக்கு ஏற்ப ஊர் பாசையாகவும், கொச்சையாகவும் இருந்தது. ஒரு சமூகம் நாகரீக வளர்ச்சியடைவும் போது, ஊர்பாசை அல்லது கொச்சை பாசை உறுப்பான மொழி வடிவம் பெற்று தனித்துவமான தேசிய மொழியாகும். இந்த நியதியின் படி தனித்துவமான மொழியாகிய தமிழ் மொழியைப் பேசிய மக்கள் பல நூற்றாண்டு காலமாகக் கூட்டாக உழவுத் தொழில் செய்து வாழ்ந்தார்கள்.

கூட்டாக உழவுத் தொழிலில் ஈடுபட்ட போது அது சார்ந்த சடங்குகள் உருவாகின. உழவுத்தொழிலில் ஈடுபட்டவர்களிடையே இவ்வாறு உருவான சடங்கே பொங்கலாகும். சமூகம் பல்பரிமாணங்களிலும் வளர்ச்சியடைந்த போது பொங்கல் என்ற சடங்கும் வழக்காறாகி, தைப்பொங்கல் பண்டிகையாக கொண்டாடப்பட்டது.

தைத்திருநாள் தமிழ் பேசும் மக்களின் கூட்டு வாழ்வையும், கூட்டு உணர்வையும், கூட்டு உழைப்பையும் வெளிப்படுத்தும் சமூக நிகழ்வாகும். அடுத்தாக உழவுத் தொழிலுக்கு மரியாதை செலுத்தும் மரபை வெளிப்படுத்தும் பண்டிகையாகும். மேலும் தை முதல் நாளிலே தமிழர் புத்தாண்டு ஆரம்பமாகிறது.

எனினும், இன்று தைத்திருநாள் சம்பிரதாய பூர்வமான விழாவாக மாத்திரமே கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இந்துகளின் பண்டிகையாக மாத்திரம் திரிபடைந்து உள்ளது. தமிழ் பேசும் மக்கள் வெவ்வேறு தினங்களில் தமது புது வருடப் பிறப்பை கொண்டாடி வருகின்றார்கள். இலங்கையில் பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் சதிகளுக்குப் பலியாகி மத, பிரதேச அடிப்படையில் பிளவுபட்டு உள்ளார்கள். இலங்கை தீவில் வாழும் தமிழ் பேசும் மக்களை ஈழவராய் இணைத்து ஒருமைப்பாட்டை வளர்ப்பதுவே பேரினவாதத்தின் சதிகளை தோல்வியுறச் செய்வதற்கான உபாயமாகும். இன்னுமொரு வகையில் ஏகாதிபத்தியத்தின் திணிக்கப்படும் உலகமயமாதல் பண்பாட்டை எமது சுயதேசிய பண்பாட்டு அம்சங்களை வளர்த்தெடுப்பதன் மூலம் எதிர் கொள்ள முடியும்.

இந்நோக்கில், நாம் தைத்திருநாளை தமிழ் பேசும் மக்களை ஈழவராய் இணைத்துக் கூட்டு உணர்வினையும், கூட்டு வாழ்வையும் வெளிப்படுத்தும் சமூக நிகழ்வாகவும், விவசாயத்துக்கு மரியாதை செலுத்தும் மரபின் வெளிப்பாடாகவும், மதம், இனம், பிரதேசம் கடந்த புதுவருட கொண்டாட்டமாகவும் மீளுருவாக்கம் செய்ய வேண்டும். எமது நடைமுறை வாழ்வியலை அதற்கொப்ப ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயம் என்பது எமது பண்பாடாகும். விவசாயம் நாட்டின்பொருளாதாரத்தைவளர்தெடுக்கும்தொழில் துறையோ, அந்நிய செலவானிக்கான மார்க்கமோ அல்ல. அது தெளிவாக வாழ்வியலின் அம்சமாகும். எனவே விவசாயத்தை எமது மக்களின் வாழ்வியலின் அம்சமாக மீண்டும் வளர்த்தெடுக்க வேண்டும்.

ஆங்கில நாட்காட்டியின் பிரகாரம் சனவரி மாத நடுப்பகுதியில் தைப் புத்தாண்டு பிறக்கிறது. இதே காலப்பகுதியில் தான் விவசாயிகள் பெரும்பாலும் அறுவடையில் ஈடுபடுகின்றார்கள். வருட இறுதி பகுதியானது உலகளாவிய ரீதியில் விடுமுறைக்கும் கொண்டாட்டங்களுக்கும் உரிய காலப்பகுதியாகும்.

எனினும், நாம் ஆங்கில நாட்காட்டியின் பிரகாரம் வருடஇறுதி பகுதி விடுமுறையை அனுபவித்துவிட்டு, எமது வாழ்வியல் சூழலை தளுவி அமைந்த எமக்கே உரித்தான நாட்காட்டியின் பிரகாரம் அமைந்த வருட இறுதிப் பகுதியைத் தவற விட்டுவிடுகின்றோம்.

உதாரணமாக இலங்கை பாடசாலைகள் ஆங்கில நாட்காட்டியின் படி டிசம்பர் மாதம் விடுமுறை வழங்கப்படும். எனினும் எமது சூழலில், எமது வாழ்க்கை முறை நாட்காட்டியின் பிரகாரம் இந்த விடுமுறை மார்கழி மாதம் அதாவது டிசம்பர் மாத நடுப் பகுதியில் இருந்து, சனவரி மாத நடுப்பகுதி வரை வரும். அவ்வாறு அமையும் பட்சத்தில் தான், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அறுவடை எனும் கூட்டு நிகழ்விலும், கூட்டு உழைப்பிலும் பங்கு கொள்ள முடியும். வருட இறுதிப் பகுதியில் அறுவடை எனும் கூட்டு செயல்பட்டு, தைதிருநாள் புதுவருட கொண்டாட்டத்தையும் முடித்துக்கொண்டு புதிய கல்வியாண்டை தொடங்க முடியும். இது எமக்கான தனித்துவமான வாழ்வியலையும், பண்பாட்டையும் சமூக உணர்வையும் கட்டியெழுப்பும்.

இது ஒரு உதாரணமான எடுத்துக்காட்டு மாத்திரமே ஆகும். இதே நடைமுறை சகல துறைகளுக்கும் பரவுமாயின் நாம் எமது கூட்டுவாழ்வையும், கூட்டு உணர்வையும், கூட்டுச் செயல்பாட்டையும் வளர்த்தெடுத்து ஒரு மொழி பேசும் மக்களாக இத்தீவில் எமது இருப்பையும், வளர்ச்சியையும் வாழ்வியல் முறைகளூடாக தக்க வைக்கும் சந்தர்ப்பம் கிட்டும். நாம் அந்த வகையில் தைத்திருநாளை சித்தாந்த ரீதியிலும், நடைமுறையிலும் மீளுருவாக்கம் செய்ய வேண்டும். மீண்டும் நாம் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ளல் வேண்டும் எமது இருப்புக்கும், வளர்ச்சிக்குமான வாழ்வியல் பண்பாட்டைக் கட்டமைப்பதில் இது வெறுமனே ஒரே ஒரு விடயம் மாத்திரமே! ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முதலாவது சம்பள உயர்வு போராட்டம்

## அன்று வளைந்த முதலாளிகள் இன்று வளைய மறுப்பதேன்?

**போராட்டம் தொடர்பான தகவல்கள் மாத்தளை ரோகிணி என்பவர் எழுதிய “உரிமை .போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்” எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்**

இலங்கை தொழிலாளர் காங்கிரசால் தேர்தல் வாக்குறுதியாக முன்வைக்கப்பட்ட, பெருந் தோட்ட தொழிலாளர்களின் நாட் சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்கும் கோரிக்கை இன்று தொழிலாளர்களை பற்றிக் கொண்டுள்ளது. எந்த தொழிற்சங்க காரரும் இதை ஒருபோதும் எதிர்பார்த்து இருக்கவில்லை என்பதை அவர்களின் தற்போதைய செயல்பாடுகள் வெளிப்படுத்தி இருக்கின்றன. பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளாகச் செயல்பட்டு வரும் நிலையில் அவர்கள் 1000 ரூபாய் கோரிக்கயைத் தேர்தல் வாக்குறுதிகளாகவும், பிரச்சாரத்துக்கான ஆயுதமாகவுமே கையாண்டு வருகின்றார்கள்.

எனவே தான், தொழிலாளர்களைத் தொழிற்சங்க ரீதியாக ஐக்கியபடுத்தி, தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு செல்லாமல், ஒருவரை ஒருவர் குறை சொல்லியும், சோம்பேறித்தனமான அறிக்கைகளை விட்டும் அரசியல் இலாபம் தேட முயல்கின்றார்கள். அதன் காரணமாகவே தொழிலாளர்கள் தமது கோரிக்கைகாக போராடுவதையும் தடுத்து வருகின்றார்கள். தொழிற்சங்க வரலாற்றிலேயே, தொழிலாளர்களின் வறுமை நிலையைக் காரணம் காட்டி போராட வேண்டாம் என்ற கோரிய தொழிற்சங்கங்களை இலங்கையில் தான் காண்கின்றோம். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டும் முதலாளி வர்க்கமும் இதைத் தான் எதிர்பார்க்கின்றது.

தொழிலாளர்கள் தம் கோரிக்கையை அடையச் சித்தம் கொள்வார்களாயின், சகல ஏமாற்றுத் தொழிற்சங்கங்களையும் கைவிட்டு, தொழிலாளர்களுக்கு ஆதரவாக களமிறங்கியுள்ள வெகுசன இயக்கங்களுடன் கரம் கோர்க்க வேண்டும். அல்லது தாம் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களின் தலைமையைப் பொறுப்பை கையிலெடுத்து தாமே போராட வேண்டும்.

தொழிலாளர்கள் தாம் கடந்து வந்த போராட்ட பாதையை மீளவும் நினைவுபடுத்திப் பார்ப்பார்கள் ஆனால் இந்த தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்குத் தயக்கம் கொள்ள மாட்டார்கள். இன்று 1000 ரூபாய் கேட்டுப் போராட விளையும் தொழிலாளர்களின் போராட்ட வரலாறு 1940 இருந்து ஆரம்பிக்கிறது. அந்த போராட்டத்தை மீளவும் நினைவு படுத்துவது தற்போதைய நிலையில் தொழிலாளர்களுக்குத் தாம் செல்ல வேண்டிய பாதையைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

1940 ஆம் ஆண்டு, ஹேவாஹேட்டவில் அமைந்துள்ள முல்லோயா தேயிலைத் தோட்டத்தில் சம்பள உயர்வுக் கோரி நடந்த போராட்டமே,பெருந்தோட்டத்துறையில் எழுந்த முதல் போராட்டமாகும். 16 சதம் சம்பள உயர்வு உட்பட ஆறு கோரிக்கைகளை முன்வைத்து 1940ம் ஆண்டு சனவரி முதலாம் திகதி முதல் 13 நாட்கள் இப்போராட்டம் நடந்தது. போராட்டத்தை நசுக்குவதற்கு நிர்வாகம் முன்னெடுத்த சகல சதிகளையும் தொழிலாளர்கள் ஒற்றுமையாலும், உறுதியாலும் உடைத்தெறிந்தார்கள். தொழிலாளர்களின் உறுதியைத் தகர்க்க முடியாத நிர்வாகம், வேறுவழியின்றி தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இணங்கியது. பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதால் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினார்கள்.

இந்நிகழ்வுக்கு சில மாதங்களுக்கு முன்னதாக தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக அமைக்கப்பட்டிருந்த பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றிய ஜெகநாதன் என்பவர் இட மாற்றம் செய்யப்பட்டிருந்தார். ஜெகநாதன் ஆசிரியர் தொழிலாளர்கள் மத்தியில் அடிமை வாழ்வு நிலையையும், முதலாளிகளால் சுரண்டப்படுவதையும் அம்பலப்படுத்தி, உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார். விழிப்புணர்வு அடைந்த தொழிலாளர்களை ஓரணியில் திரட்டினார். அக்காலங்களில் தோட்ட பாடசாலைகள் தோட்ட நிர்வாகத்தின் கீழேயே இருந்தன. எனவே, ஜெகநாதன் ஆசிரியரை தோட்ட நிர்வாகம் இடமாற்றம் செய்து பழிவாங்கியது. வேலுசாமி என்ற தொழிலாளர் தலைவர், நிர்வாகத்தின் பழிவாங்கல் நடவடிக்கைக்;கு எதிராக தொழிலாளர்களை திரட்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட வைத்தார்.

இதனால், நிர்வாகம் வேலுசாமி மீது பொலிசில் புகார் கொடுத்தது. நிர்வாகத்துக்குச் சார்பாகச் செயல்பட்ட பொலிசார் வேலுசாமியை 3 மாதங்கள் சிறையிலடைத்தார்கள். வேலுசாமி சிறையிலிருந்து விடுதலையான பின்னரே, சம்பள உயர்வு உட்பட 6 அம்ச கோரிக்கையை முன்வைத்து 13 தினங்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார்.

13 நாள் வேலை நிறுத்த போராட்டம் கண்டி கச்சேரியில் தொழிலாளர் தலைவர்களுக்கும், தோட்ட முகாமையாளர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் எட்டப்பட்;ட இணக்கப்பாட்டுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது, எனினும், இணக்கம் கண்ட வகையில் நிர்வாகம் செயல்படாத காரணத்தினால் தொழிலாளர்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்க தயாரானார்கள்.

1940 – சனவரி 15 ம் திகதி, தொழிலாளர்கள் மதிய உணவிற்காக தமது குடியிருப்புகளுக்கு சென்றிருந்தார்கள். அச்சமயத்தில் ஹங்குரான்கெத்த பொலிஸ் சர்ஜன்ட் சுரவீர தலைமையில் பொலிஸ் குழுவொன்று வந்திறங்கியது. தொழிலாளர்களை நோக்கி ‘யார் உங்கள் தலைவன்? யாரடா தொழிற்சங்கம் அமைத்து குழப்பம் ஏற்படுத்துவது?’ என கூச்சலிட்டவாரு , தொழிலாளர்களை மிலேச்சத்தனமாகத் தாக்கினார்கள். பெரியசாமி என்ற தொழிலாளி பொலிஸ் வண்டியின் சக்கரத்தில் அகப்பட்டுத் துடிதுடித்தார்.

பொலிசாரின் அராஜகத்தினால், தொழிலாளர் குடியிருப்பு பகுதி அல்லோலகல்லோல பட்டது. சம்பவ இடத்தில் தொழிலாளர்களும் ஒன்று கூடினார்கள். இதனைத் தேயிலை தொழிற்சாலையில் வேலை செய்துக் கொண்டிருந்த கோவிந்தன் என்ற தொழிலாளி கண்டுவிட்டார். உழைத்து உழைத்து உறுதியான தேகம் கொண்டிருந்த கோவிந்தன், பொலிசார் தொழிலாளர்களை தாக்குவதைக் கண்டு வெகுண்டெழுந்தார். தேயிலை கொழுந்து சேகரிக்கும் மட்டையை கையிலெடுத்துக் கொண்டு, தொழிலாளர் குடியிருப்பை நோக்கி ஓடினார். இதை பொலிஸ் வண்டியிலிருந்து அவதானித்த சுரவீர, தனது துப்பாக்கியால் கோவிந்தனை சுட்டுவிட்டான். துப்பாக்கி குண்டுகள் கோவிந்தனின் மார்பை துளைத்து சென்றது. துடிதுடித்து மண்ணில் சாய்ந்த கோவிந்தன், அந்த இடத்திலேயே உயிர்துறந்தார்.

எப்போதும் செஞ்சட்டை அணிந்து, தொழிலாளர்களின் போராட்டங்களில் முன்நின்ற கோவிந்தனின் சட்டை குருதியில் தோய்ந்து செந்நிறமாகியது. கோவிந்தன், நிர்வாகத்தின் ஏவல் நாயன் சர்ஜன்ட் சுரவீரவினால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி காட்டு தீ போல் அயல்த் தோட்ட தொழிலாளர்களிடம் பரவியது. பொலிசாரின் ஈனச்செயல் தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை கொதித்தெழ செய்தது. தொழிலாளர்கள் பொலிசாரின் ஈனச் செயலுக்கு எதிராக நீதி கேட்டு போராட்டத்தில் இறங்கினார்கள்.

கோவிந்தனின் இறுதி ஊர்வலத்திலும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் உணர்ச்சி மேலிடக் கலந்துக் கொண்டு மரியாதை செலுத்தியிருந்தார்கள். உரிமைப் போராட்டத்தின் மகிமையை உலகறிய செய்து தொழிலாளர்களின் உரிமைபோராட்டத்தில் தன் இன்னுயிரைத் தியாகம் செய்து தியாக வரலாற்றை தொடக்கி வைத்தார் வீரமனிதர் கோவிந்தன்.

பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்திற்கு எதிரான வழக்கில் தொழிலாளர்களுக்கு வெற்றிக் கிடைத்தது. கோவிந்தனின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குமாறும் தீர்ப்பு வந்தது. எனினும் சர்ஜன்ட் சுரவீர அரச பதவியுயர்வும் சன்மானமும் வழங்கி கௌரவிக்கப்பட்டான். பொலிசின் அராஜகத்துக்கு அப்போது சட்டசபை உறுப்பினராகவிருந்த ஏ.இ.குணசிங்கா போன்றவர்கள் பின்னணியில் இருந்து ஆதரவு கொடுத்திருந்தார்கள். சிவப்பு சட்டை, கோபம் தெறிக்கும் கண்கள், மிடுக்கான வேக நடையுடன் வந்த கோவிந்தனை, தொழிலாளர் தலைவர் வேலுச்சாமி என எண்ணியே சுட்டதாக சர்ஜன் சுரவீர பின்னாளில் கூறியிருந்தான்.

வீரமனிதர் கோவிந்தனின் இளம் மனைவியின் பெயர் பொட்டு. மகன் இராமையா. இவர்கள் இருவரும் பின்னாளில் இந்தியா சென்றுவிட்டார்கள்.

இப்போராட்டத்தின் காரணமாகத் தொழிலாளர்களின் நாட் சம்பளம் 16 சதமாக உயர்த்தப்பட்டது. தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் கிடைத்தது.

இப்போராட்டமே பெருந்தோட்டங்களின் மேலும் பல போராட்டங்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. வீரமனிதர் கோவிந்தன் போன்ற பலரின் தியாகத்தினாலும், தொழிலாளர்களின் தளர்ந்து போகாத உறுதியினாலும் வளர்ந்த தொழிற்சங்கங்களையும், வென்றெடுத்த உரிமைகளையும் இன்று தொழிலாளர் விரோத பிழைப்புவாத தொழிற்சங்க தலைவர்கள் காட்டிக் கொடுத்துப் பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். தொழிலாளர்கள் தமது வரலாற்றை மறந்துவிட்டு தாம் கட்டியெழுப்பிய தொழிற்சங்கங்களை பிழைப்புவாதிகளிடம் தாரை வார்த்து விட்டார்கள். இதனால் தான், இன்று பெரும் வர்த்தகர்கள், கம்பனிகளில் பங்கு வைத்திருப்பவர்கள், போதைப் பொருள் கடத்துபவர்கள் என பிழைப்புவாதிகள் தொழிற்சங்கங்களின் தலைவர்களாக வலம் வந்துக் கொண்டிருக்கின்றார்கள் .

ஆங்கிலலேயர் ஆட்சிக்காலத்தில் உலகத்திலிருந்து ஓரமாய் மலைமுகடுகளில் அடைப்பட்டு தொழிற்சங்க பலம், அரசியல் பலம் எதுவும் இல்லாமல் வாழ்ந்த காலத்திலேயே நியாயமான சம்பள உயர்வைப் போராடி வென்றார்கள் தொழிலாளர்கள்.

ஆனால் இன்று, தொழிற்சங்கங்ளாலுயே வெளியுலகுடன் நல் தொடர்பும், தொழிற்சங்க பலமும், அரசியல் பலமும் இருந்தும், அரசியல்வாதிகளினதும், வெகு சனத்தினதும் முழு ஆதரவு இருந்தும் தொழிலாளர்களால் சம்பளவு உயர்வுக்காக போராடாமல் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் கடத்தும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா சனாதிபதி ?

சனாதிபதி மைத்திரிபால போதை பொருள் கடத்தல் தொடர்பாகத் தீவிரமான நடவடிக்கை எடுக்கப் போவதாக காட்டி வருகின்றார். சிறையிலிருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை தூக்கிலிட போவதாகவும் கூறியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல், பாதாள உலக கும்பல்களின் தொடர்பில்லாமல் நடைபெறுவதில்லை. இரண்டுமே அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடியவர்கள் அல்லது அணுகக் கூடியவர்களின் பின்னணி இல்லாமல் இயங்குவதில்லை.

எனவே, போதைப்பொருள் கடத்தல்களுக்கு அதிகார தரப்பிலிருந்து அனுசரணை வழங்குப்படுதை தடுக்காமல் எந்த நடவடிக்கை எடுத்தும் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஏனெனில், அதிகார தரப்பிலிருப்பவர்கள் புதிய கடத்தல்காரர்களை உருவாக்கிக் கொள்வார்கள்.

எனவே, சனாதிபதி போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதில் நேர்மையாக இருப்பார் எனில், தான் தலைமை வகிக்கும் நாட்டின் அதியுயர் அதிகார அவையான அமைச்சரவையிலிருந்தும், பாராளுமன்றிலிருந்துமே ஆரம்பிக்கவேண்டும்.

போதைப்பொருள் கடத்தலில் அரசியல்திகளுக்கிருக்கும் தொடர்புகள் குறித்துப் பல சந்தர்ப்பங்களில் பலராலும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த மாதம் பாராளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணை விவாதம் ஒன்றில் மலையக அமைச்சர் ஒருவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கூறியிருந்தார். அது பாராளுமன்ற விவாதங்களை ஆவணப்படுத்தும் ஹன்சாட் அறிக்கையிலும் பதிவாகியுள்ளது.

அதே போல் கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசாங்கத்திலிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார்.

2015ம் ஆண்டு ஜீலை மாதம் 6ம் திகதி தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தலைவராகவிருந்த நிலங்க சமரசிங்க ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் மத்திய மாகாணத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்பு பட்டுள்ளார் என்று கூறியிருக்கின்றார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது கட்சி செயலாளர்கள் கோரும் பட்சத்தில் போதைப்பொருள் கடத்தலில் தொடர்புபட்ட குறித்த கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வழங்க முடியுமென்று அறிவித்திருந்தார்.

எனினும், நல்லாட்சி அமைத்த பின் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக கடுமையாக செயற்பட்ட அப்போதைய போதைபொருள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் நிலந்த சமரசிங்கவை பதவியிலிருந்து தூக்கியிருந்தார்கள் ஒழிய, எந்தவொரு போதைப்பொருள் கடத்திய பாராளுமன்ற உறுப்பினரையும் அம்பலப்படுத்தவில்லை.

இந்நிகழ்வுகள் அனைத்தும் போதைப் பொருள் கடத்தலுடன் அதிகாரத்தில் இருப்பவர்களுக்குத் தொடர்பிருப்பதையும், அவர்கள் யார் என்பதை அரச உயர்தரப்புகள் அறிந்து வைத்துள்ளமையுமே வெளிப்படுத்துகின்றன.

எனவே, சனாதிபதி நேர்மையான முறையில் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பார்களாயின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் போதைப் பொருள் கடத்தல்காரர்களை அம்பலப்படுத்தி தண்டனை வழங்குவதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.■



# புரட்சி என்பது தேநீர் விருந்தல்ல

— மாவோ —

*மாவோ சேதுங் உலகில் தோன்றிய மகத்தான தலைவர்களில் ஒருவராவார். மக்கள் சீனத்தின் முன்னோடிகளில் ஒருவர் ஆவார். 1983 ஆம் ஆண்டு சீனாவின் ஹூனான் மாகாணத்தில் ஓர் விவசாய குடும்பத்தில் பிறந்தார். மாவோ பள்ளிக்குச் செல்ல முன் விவசாய வேலைக்கு அனுப்பப்பட்டார். ஆறு வயதிலிருந்து விவசாய வேலை செய்த மாவோ, எட்டாவது வயதிலேயே பள்ளிக்குச் சென்றார். பகலில் படிப்பு, இரவில் வேலை என இருந்த மாவோ, பலமுறை பள்ளிக்குச் செல்வது பிடிக்காமல் கல்வியை இடைநிறுத்தி இருந்தார். தனது பதிமூன்றாவது வயதில் பள்ளிச் செல்வதை முழுமையாக நிறுத்தி விட்டு விவசாயத்தில் ஈடுபடலானார்.*

*மாவோ வாசித்த ' எச்சரிக்கை தரும் வார்த்தைகள்' எனும் நூல் அவரது வாழ்க்கையே தலைகீழாக மாற்றியது. உண்மையில் அது சீனாவின் தலையெழுத்தை, உலகின் போக்கை மாற்றியது என்றால் மிகையாகாது. 'எச்சரிக்கை தரும் வார்த்தைகள்' எனும் நூலை வாசித்த போது, சீனாவின் பலவீனங்களையும் உலகின் வலிமையையும் அறிந்து கொண்டார். அது முதற்கொண்டு பள்ளிப் படிப்பை தொடர வேண்டும் என்ற ஆவல் அவருக்குள் ஏற்பட்டது.*

*நண்பர் ஒருவரின் உதவியுடன் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார் மாவோ. கம்யூனிச கொள்கைகளின் பால் ஈர்க்கப்பட்டு, அதை ஆழமாகக் கற்றார் . 1921 இல் சீனக் கம்யூனிச கட்சியைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரானார். 1935 இல் சீனக் கம்யூனிச கட்சியின் தலைவரானார்.*

*சீனாவில் பொதுவுடைமைப் புரட்சியை நடத்திய கட்சியை வழிநடத்திய மாவோ, மக்களே உண்மையான செயல்வீரர்கள், மக்கள் மட்டுமே உலக வரலாற்றைப் படைக்கும் சக்தி என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார் மவோ. இதனாலேயே மக்களிடம் செல்லுங்கள் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் என்பதை வலியுறுத்தினார். அவர் சொல்லியதைச் செயலிலும் காண்பித்தார்.*

*சீனாவின், ஹூனான் மாகாணத்தில் நிலப்பிரபுக்களை வீழ்த்தி அதிகாரத்தைக் கையிலெடுத்த புரட்சிகர எழுச்சியை நிகழ்த்தியிருந்த விவசாயிகள், நிலப்பிரபுக்கள் மீது காட்டிய அதிகாரம் குறித்துப் பரவலான விமர்சனங்கள் சீனாவிலும், கட்சியிலும் எழுந்தன. மாவோ ஹூனான் மாகாண கிராமங்களுக்கும், குக் கிராமங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராய்ந்தார். 34 நாட்கள் மக்களை நேரடியாகக் களத்தில் சந்தித்த மாவோ ஓர் முழுமையான அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையின் ஓரிடத்தில், விவசாயிகளின் நிலப்பிரபுக்களின் மீதான அதிகாரத்தை நிலைநாட்டிய நடவடிக்கையை பின்வருமாறு விபரித்திருந்தார்.*

கிராமப் புறங்களில் நம் விவசாயிகள் கட்டுக்கடங்காமல் தான் இருக்கின்றார்கள். ஆண்டாண்டு காலமாக அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து தொந்தியை வளர்த்த நிலப்பிரபுக்களை அவர்கள் எந்தக் கருத்துக் கூறவும் அனுமதிப்பதில்லை. அவர்களது மதிப்பையும் கௌரவத்தையும் குப்பை கூளங்களில் தூக்கியெறிந்து விட்டார்கள். இது நிலப்பிரபுக்களை மண்ணில் போட்டு மிதித்து அங்கிருந்து எழாத வண்ணம் அப்படியே அழுத்தி வைப்பதாகும். விவசாயிகள் கொடுங்கோலருக்கும், தீய மேட்டுக்குடியினருக்கும் அபராதம் விதிக்கின்றார்கள். பொது நிதிக்கும் பணம் கொடுக்கும்படி அதிகாரத்துடன் கேட்கின்றார்கள். மிக அற்பமான விடயங்களுக்குக் கூட கொடுங்கோலர்களை கைது செய்கின்றார்கள். கைதுசெய்யப்பட்டவர்களுக்கு உயரமான காகித கீரிடம் அணிவித்து தெருக்களில் இழுத்துச் செல்லும் போது “ஏய் கேடு கெட்ட நிலப்பிரபுக்களே! இப்போது நாங்கள் யார் என்று தெரிகிறதா” என கேட்கின்றார்கள். உண்மையில் விவசாயிகள் கிராமபுறங்களில் ஒரு பயங்கரமான நிலைமையை உருவாக்கியிருக்கின்றார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் கொடுங்கோலர்களும், தீய மேட்டுக்குடியினரும், அராஜக நிலப்பிரபுக்களுமே ஆவர். இவர்கள் காலங்காலமாக விவசாயிகளை கொடுமைப்படுத்தவும், காலடியில் போட்டு மிதிக்கவும் பயன்படுத்தினார்கள். அதனால்தான் விவசாயிகள் இவ்வளவு பலமாகத் திருப்பித் தாக்குகின்றார்கள். விவசாயிகள் தெளிவான கண்ணோட்டத்துடன் இருக்கின்றார்கள். யார் கெட்டவர்கள்? யார் நல்லவர்கள்? யாருக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்? யாரைச் சாதாரண தண்டனையோடு விட்டு விட வேண்டும் என தெளிவான கணக்கு வைத்திருக்கின்றார்கள். மிக அபூர்வமாகத்தான் தண்டனை குற்றங்களை மீறியுள்ளது. இது தவிர்க்க முடியாதது.

ஏனெனில், புரட்சி என்பது ஒரு மாலை நேர விருந்தோ. ஒரு கட்டுரை எழுதுவதோ, ஒரு ஓவியம் தீட்டுவதோ, ஒரு பூத்தையல் வேலையோ அல்ல. அது மிகவும் பண்பானதாகவும், ஓய்வும் இதமும் உள்ளதாகவும், நிதானமுள்ளதாகவும், கருணை மரியாதை, அடக்கம் மற்றும் பெருந்தன்மையுள்ளதாகவும் இருக்க முடியாது. ஒரு புரட்சி என்பது ஒரு ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சி, ஒரு பலாத்கார நடவடிக்கை, அதன் மூலம் ஒரு வர்க்கம் மற்றொன்றை தூக்கியெறிவதாகும். கிராமப்புற புரட்சி என்பது விவசாயிகள் நிலப் பிரபுத்துவ நிலவுடமை வர்க்கத்தின் அதிகாரத்தை தூக்கியெறியும் ஒரு புரட்சியாகும். மிகப்பெரும் சக்தியைப் பிரயோகிக்காமல் ஆழமாய் வேர்விட்டு தலைமுறை தலைமுறையாய் நீடித்திருந்த நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தைத் தூக்கியெறிய முடியாது. கிராமப் புறங்களில் ஒரு சக்திவாய்ந்த புரட்சிகர எழுச்சி தேவை. ஏனெனில் அதனால் மட்டுமே இலட்சக் கணக்கான விவசாய மக்களைத் தட்டி எழுப்ப முடியும். அளவுக்கு மீறீ போவதாக இங்கே முத்திரை குத்தப்படும் எல்லா நடவடிக்கைகளும் கிராமப்புறங்களில் சக்தி மிக்க புரட்சிகர எழுச்சி வெளிப்படுத்திய, விவசாயிகளின் அதிகாரத்திலிருந்து தோன்றியவை.

## விமர்சனங்கள் - பங்களிப்புகள் தொடர்புகளுக்கு அழைக்கவும்

*மக்கள் பத்திரிக்கையில் வெளிவரும் கட்டுரைகள், செய்திகள் தொடர்பான உங்களது விமர்சனங்கள், ஆய்வுகள், கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்கலாம்.*

*கட்டுரையாளர்களிடம் உங்களது கேள்விகளையும், எதிர் விமர்சனங்களையும் முன்வைக்கலாம். கருத்துக்களையும் கேள்விகளையும் மின்னஞ்சல், தபால் முகவரி மூலமாகவும், எமது முகபுத்தக பக்கம் ஊடாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உங்களது அனுப்புங்கள்.*

paththirikkai@gmail.com | +94769098390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கை இல.09, வேளாங்கன்னி ஒழுங்கை, திரேசா வீதி, பாலையூற்று, திருகோணமலை எனும் முகவரியில் வசிக்கும் பழ றிச்சர்ட் ஆகிய என்னால் இல.09, வேளாங்கன்னி ஒழுங்கை, திரேசா வீதி, பாலையூற்று, திருகோணமலை எனும் முகவரியில் அமைந்துள்ள லங்காராணி பப்ளிகேசன் அச்சகத்தில் அச்சாக்கம் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.